
744

# பைந்தமிழ்

தொகுதி – 1 மலர் 1

JL
O31m211, N23
N23.1.1.
144019

## "பைந்தமிழ்ப்" போஷகர்.



ஸ்ரீமான்

ஸர். எம். ஸி. டி. முத்தய்யா செட்டியார் அவர்கள். Kt., M. L. C.

---

(இவரது சரித்திரத்தை 43-ம் பக்கத்திற்-பார்க்க.)

10 FEB

கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.


| தொகுதி | துந்துபிஸூ தைமீ | பகுதி |
|---|---|---|
| 1 | 1923ஸூ ஜனவரிமீ | 1 |


## கடவுள் வணக்கம்.

### விநாயகர்.

"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

### ஆறுமுக நாயனார்.

"ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா றுவெழுத் தாறுமானே
னாறுமிளிர் தண்டமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறாத பிறவியினைப் பாறு வாரே."

---

1. அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்

றெங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
  வெங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
  யென்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
  கருத்துக் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளி யதாகவுங்
  கருதியஞ் சலிசெய் குவாம்.

---

2. சோதி மதியின் பாதி யரவஞ் சூடு சடையன் றேடு கமழுங்
காதி லமிர்தம் போல வரசுங் காழி யிறைபுங் கூறு தமிழின்
பாத கமலம் பாடு மவர்தம் பாத கமலம் பாறியகலும்
போதுசெறியும் போது விரியும் பூவை மருவும் பூவை மருவும்.

3. கோடு செறியும் பாணி யவனுங் கோக நகனுந் தேட வரியன்
தேடு மவரன் பாக விழிமுன் பாக வருவன் றேவ ரிறைகொண்
டாடு மயிலன் காள முகில்கண் டாடு மயிலன் றுதை சடிலஞ்
சூடு மரவ னுடு மொருவன் சோதி மதியன் பாதி மதியன்.

---

## விசேடப்பொருள்.

1. 'அங்கு' 'இங்கு' என்பவை அண்டாண்ட. பிரமாண்டங்கள்-இனம் பற்றி 'உங்கு' எனக் கூட்டிப்பொருள் கொள்க.

2. 'எங்கும்'-மேல், கீழ், உள், புறம், நடு, பக்கம்-இவைகளை உணர்த்தாநின்றது.

3. 'அருள்வெளி' - அருளாகிய ஆகாயம்.

4. 'சமயகோடிகள்' - உட்சமயம், புறச்சமயம் - உட்சமயங்களாவன - சைவம், பாசுபதம், வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம் - புறச்சமயவங்களாவன - பௌத்தம், சமணம் மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சாத்ரம் - இன்னும் சிலர் ஸௌரம் முதலானவைகளாகவும் கூறுவர்.

# நமது பத்திரிகையின் பிறப்பு.

அமிழ்தினுமினிய தமிழ்மொழிச் சகோதர சகோதரிகளே!

"பைந்தமிழ்" என்னும் பெயர் புனைந்த ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையைப் பிரசுரம்செய்ய தங்களுக்கு முன்னர் வெளிவந்திருக்கிறோம். அது நமது தமிழ்நாட்டில் சிறந்துவளர்ந்தோங்கி புகழுடையுமாறு நீங்கள் எல்லோரும் உதவி புரியும்படி வேண்டுகிறோம். அவ்வாறு செய்யப்படும் உதவியால் தமிழ் அன்னையும் எல்லோருக்கும் எவ்விதமேன்மையும் ஸர்வ அபீஷ்டமும் அளிப்பாள் என்பதற்கு ஐயமில்லை.

சகோதர சகோதரிகளே!

இதுகாறும் இத்தமிழ் நாட்டில் அருமை பெருமையுடன் பிறந்து தங்களது ஆதரவால் வளர்ந்து புகழடைந்த பத்திரிகைகள் பல விருக்கும்போது நமது "பைந்தமிழும்" இப்போது வெளி வருவது அவசியமோவெனும் ஐயம் பலர் கொள்ளலாம். நாம் அதற்கு நம் சிற்றறிவுக்கு ஏற்ப சில ஆதாரங்கள் மூலம் நம் தமிழ்த்தேசத்தில் இப்போதிருப்பவை மட்டுமல்லாது இன்னும் ஏராளமான பத்திரிகைகள் இருக்கவேண்டுமென்று எடுத்துக் காட்ட முயல்வோம்.

நமது பரத பூமிக்கு நற்பாகமென்று முற்காலந் தொட்டு விளங்கிவரும் தமிழ்நாடு இப்போதிருக்கும் நிலைமையைக்கருதுவீர்கள். முற்காலத்து நாகரீகம் முற்றிலும் மாறுபட்டு புதிய சக்தி ஒன்று பிறந்து அத்துடன் புதிய நாகரீகம் ஏற்பட்டு இந் நாகரீகம் கொஞ்சம் கொஞ்சமாய் நமது பூர்வீக நாகரீகத்தை அழியச்செய்வது யாவருமறிந்த விஷயம்.

கல்வி கற்க வேண்டிய முறை மாறவே, இப்போது நமது எண்ணத்தை வெளிப்படுத்தும்போதும் கல்விகற்றவர்களுங்கூட முற்றிலும் சுத்த தாய்ப்பாஷையில் வெளிப்படுத்த முடியாது,

மற்ற பாஷையின் சொற்களைக்கொண்டு மணிப்பிரவாளமாய்ப் பேசும் காலம் வந்துவிட்டது. இதனால், பாஷை சம்மந்தமட்டில் அது சீர்குலைந்து போயிருக்கிறதென்பது சொல்லாமலே விளங்கும்.

இன்னும் தற்காலத்துக்கல்வியினால் நமது அறிவு அதிகமாய் விர்த்தியாவதாயினும் நமது கல்விபுகட்டுவதின் முறையினால் நமது பூர்வீக விஷயங்களும் பூர்வீக பெருமையும் அறியாது நாம் தத்தளிக்க ஹேது ஏற்பட்டுவிடுகிறது. உதாரணமாக, கவிச்ரேஷ்ட ஒருவரைப்பற்றி நாம் கூறும்போது அவர் பெரிய ஷேக்ஸ்பியர் மில்டன்போல இருக்கிறார் என்கிறோமேயொழிய, நம்நாட்டுக் கம்பன் ஒட்டக்கூத்தன் புகழேந்தி முதலியோரை ஒத்துக் கூறுவதை வெகுவாகக்காணோம். இது கல்விபுகட்டுதலின் முறையின் காரணமென்றே கூறவேண்டியிருக்கிறது. வெகு தமிழ்ச் சகோதர சகோதரிகளுக்கு கம்பன் முதலியவர்களின் கவிப்புலமை தெரியாமலுமிருக்கிறது.

இன்னும் அந்நிய நாட்டுகளின் சம்மந்தம் ஆதிமுதற்கொண்டு நம்நாட்டுக்கு ஏற்பட்டு வருகிறபடியால் அன்னிய நாகரீகத்தின் சிறுமை பெருமை தெரியாது அந்நாகரீகத்தில் எதை எடுத்துக் கொள்ளவேணுமோ அதை விலக்கவும், எதை விலக்கவேண்டுமோ அதை எடுத்துக்கொண்டும், நாம் சில மாயைகளில் விழுந்துபோக இடம் யேற்பட்டுவிட்டது.

தவிர, நமது நாட்டின் ஆதிப்பெருமையும் அதன் உன்னத சரித்திரமும் அது எவ்வாறு தன் நாகரீகத்தால் இதர நாகரீகங்களை சிறக்கச்செய்ததென்றும் பலேலோர்களுக்கு தெரியவராது என்பது வியசனிக்கத்தகும் விஷயமே.

இப்பூவுலகின்கண் ஏற்பட்டு விளங்கும் பலபலஜனசமூகங்களும் தங்கள் தங்கள் ஆக்ஷி முறைகளைக்கொண்டு தங்கள் தங்கள் நாட்டினுடையவும் ஜனங்களினுடையவும் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு உழைத்துவந்து இப்போது எல்லா நாட்டார்களும் அன்னியோன்னியமாப்ப் பழகுவதற்குரிய ஏற்பாடுகள் உண்டாகியிருக்கின்றன. இத்தகைய காலத்தில் நமது நாட்டார்கள் மற்ற



நாட்டார்களுடன் சேர்ந்து சமத்துவம் அடையும்படி கல்வியிலும் கேள்வியிலும் மதிப்பிலும் செல்வத்திலும் விர்த்தியடைய வேண்டுவது அத்யாவசியமன்றோ?

மேலும், நமது நாட்டிலேயே அழுந்திக்கிடக்கும் அநேக கேவல விஷயங்களை நாம் ஒழித்துவிடவேண்டியதாய் ஏற்படுகிறது. உதாரணமாக, கல்வியின்மை, பால்ய விவாகம், அசௌக்கியமான வியாதி முதலிய துன்பங்களுக்கு தடைசெய்யாமை, சோம்பேறித்தனம் முதலிய குற்றங்களை நாம் களையவேண்டியது நமது முதற் கடமையாகும்.

ஆதலால், நமது தமிழ்ப்பாஷை முன்னேற்றமடையச்செய்வதிலும், நமது பூர்வீகசரித்திரத்தையும் அதன் பெருமையையும் எடுத்துக்காட்டுவதிலும், அந்நியநாகரீகங்களில் உள்ள குற்றங்களை காட்டி களைவதிலும், குணங்களை மேற்கொள்ளச்செய்வதிலும், இதர நாகரீகங்களும் தேசங்களும் எவ்வாறு படிப்படியாய் முன்னேற்ற மடைந்தன வென்பதைக்காட்டுவதிலும், பொதுக்கல்வியூட்டுவதிலும், நாம் எவ்வாறு நம்மிடமிருக்கும் குறைவுகளை சீர்படுத்தி மேன்மையடையலாம் என்பதைத்தெரிவிப்பதிலும், பத்திரிகைகளை விடவேறு மிகப்பிரயோஜனமுள்ள கருவிகளுமுண்டோ?

இவ்வாறு கருத்துக்கொண்டு வெளிப்பட்டு அறிவையூட்டும் பத்திரிகைகளுக்கு ஒரு நாட்டில் ஒரு அளவும் ஏற்படுத்தல் கூடுமோ? எவ்வளவுக்கெவ்வளவு பத்திரிகைகள் வெளிவந்து உலாவுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நம்நாட்டில் கல்வியூட்டுவதும் அறிவு விர்த்தியாகிறதுமல்லவா? இப்பெரும் காரியங்களைச் செய்தும் நல்லறிவு பாவச்செய்து தேச நன்மயைக்கோறி உழைப்பதுமான பத்திரிகைகளை நமது நாட்டு ஆண் பெண் சகலரும் ஆதரித்து வளர்த்து உதவிபுரியவேண்டியது அவர்களின் கடமையன்றோ?

ஆகவே, மேற்கண்ட காரியங்களைச்செய்வதே நமது பைந்தமிழின் நோக்கமாகும். ஆதலால், எம்மாலியன்றவரை அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும் சுவையுடனும் மேற்கண்ட

விஷயங்களையும் மற்ற கல்வியூட்டக்கூடிய இதர விஷயங்களையும் நமது தமிழ் நாட்டு சகோதர சகோதரிகளுக்கு எடுத்துரைக்கப் படும். அவர்களெல்லோரும் இப்பத்திரிகையை ஆதரித்து ஒவ்வொரு இல்லந்தோறும் இதை ஏற்று படித்து ஆனந்திக்கும் பக்ஷத்தில் நாம் எடுத்த கருமத்தின் பயன் அடைந்ததாகக்கருதி இதை வெளியிட முன்வந்தோம்.

இந்தப்பத்திரிகையில் கடவுள் வணக்கம், பத்திரிகாசிரியரின் குறிப்புத் தவிர்த்து பொது அறிவு புகட்டக்கூடிய வியாஸங்கள், ஆதிகாலத்தில் மேன்மையடைந்த சாஸ்திரங்களின் விஷயங்கள், தற்காலத்தில் உள்ள அவசியமான விஷயங்கள், சிறந்த ஆரிய மக்களின் ஜீவிய சரிதைகள், விநோதக்குறிப்புகள், கதைகள், பொது சமாசாரங்கள், புராணத்தொகுதிகள் முதலிய எல்லா வகை விஷயங்களும் உயர்ந்த நடையில் பலபிரபலமனுஷர்களாலும் பண்டிதர்களாலும் எழுதி வெளியிடுவோம்.

ஆதலின் தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வரவேற்று பயனடையுமாறு எல்லாம் வல்ல இறைவனிருதாட்களையும் போற்றுகிறோம்.

---

## சிவபெருமானும் செந்தமிழும்.

ஊரும்பேரும் உருவுமில்லாதவன்
ஊரும்பேரு முருவமுந்தாங்கி
ஆதிசைவ அந்தண விருத்தனாய்
நாவலூராளியின் நறுமணம்தடுத்த
ஆவணவெழுத்தும் அந்தணர் முன்னர்ப்
பேசியபேச்சும் பெருந்தமிழ்ப் பாஷையே
பித்தனென்றே பீடுறப்பாடென
அத்தன்மெய்யுருவுடனறைந்ததும் தமிழே
சித்தவடமெனும் திருமடாலயத்தில்



வீரட்டானொரு விருத்தவேதியனாய்
மலர்ப்பதஞ்சூட்டி மலர்ந்ததும் தமிழே
அம்பலத்தாடு மண்ணலெம் பெருமான்
ஆரூர்வாவென் றழைத்தும் தமிழே
சுந்தரா நினது தோழன்யாமென்று
வன்மீகநாதர் மலர்ந்ததும் தமிழே
பரவையார் விவாகப் பண்பும் பின்னர்த்
தூதுநடந்துபோய்ச் சொற்றதும் தமிழே
திருமுதுகுன்றம் செல்வழி யதெனக்
கூடலையாற்றூர் கொணர்வழிகூறி
மறையவர்கோலம் மறைத்ததும் தமிழே
திருக்கருகாவூர் செல்லும் வழியில்
பிராமணவடிவம் பீடுறத்தாங்கி
நீரும் சோறும் நிழலுமமைத்துப்
பசிதணிவித்த பாஷையும் தமிழே
திருக்கச்சூரிலே திருவமுதருத்த
ஐயருருவொடு மந்தணரிலந்தொறும்
ஓட்டில்யாசித்தங் குரைத்ததும் தமிழே
சங்கிலியார்பாற் றழைத்ததும் தமிழே
ஐயாறுடைய வடிகளோவென்னக்
கன்றொன்றழைக்கக் கதறிய பசுப்போல்
ஓலமென்றிவ் வுலகெலாங் கேட்ப
உரைத்தமொழியு மொண்டமிழ் மொழியே
தில்லையில்வாழ்ந்த திருநீலகண்டர்
ஓட்டினை ஒளித்தங் குரைத்ததும் தமிழே
இயற்பகைமனையி லிசைத்ததும் தமிழே
அமர்நீதிபாலங் கறைந்ததும் தமிழே
மாறன்விருந்து வார்த்தையும் தமிழே
கண்ணிடந்தப்பிய திண்ணனாரை
நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப என்
னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப என்
றடுக்குத்தொடரா யழைத்ததும் தமிழே

தூசினையொலிக்கும் நேசர்பாற் சென்று
ஆடையருளியங் கறைந்ததும் தமிழே
தாதைதாளெறிந்த சண்டேசுரர்க்குத்
தாதை நாமென்று சாற்றலுந் தமிழே
திருப்பைஞ்ஞீலியிற் செல்லும் வழியிற்
காவும்குளனும் கடிதினமைத்தே
ஆற்றுணவருந்தி யப்பமூர்த்தியின்
இளைப்பையகற்றியங் கிசைத்ததும் தமிழே
வடகயிலாய மாட்சியைக்காண
வழிநடைகொண்ட வாக்கின்செல்வர்
உடல்குறைந்தாலு முளங்குறையாமல்
முந்நூறுங்காலை முனிவர்போற்றென்றி
இன்னும்பாமாலை யேற்கவேயுன்னி
ஐயாறதனி லத்தகைக்கோலங்
காட்டுவோமென்ற கருணையுந்தமிழே
அம்மையுமத்தனு மல்லாவொருவன்
புனிதவதியெனும் புண்ணியவதியை
அம்மேவாவென் றழைத்ததும் தமிழே
திருச்செங்காட்டிற் றிருவடி தோய்வுற
வைரவக்கோலம் வளம்பெறக்கொண்டே
பிள்ளைக்கறியுணும் பேச்செலாந்தமிழே
திருவெண்காடர் செய்தவப்பேறாய்
மருதவாணர்மகவென வளர்ந்தே
பதினாறாண்டு பயின்றதும்தமிழே
தாயுந் தந்தையுந் தனயருமாகிய
மூவரும் மதுரையில் முறைபுரி நாளில்
வழங்கிய மொழியெலாம் வண்டமிழ் மொழியே
தென்னன் குமரன் றிருமுடிதனக்கு
நன்மணிவணிகனாய் நவின்றதும் தமிழே
எல்லாம்வல்ல சித்தராய் மதுரையில்
வல்லமைகாட்டி மலர்ந்ததும் தமிழே
ஆசான் மனைமே லாசையோனங்கம்



வீசியெறிந்த மேன்மையுந் தமிழே
மீனவன்முன்பு மெய்க்காட்டிட்டே
யூனமில்பரியிவர்ந் துரைத்ததும் தமிழே
மைவிழியாராம் வணிகப்பெண்கள்பாற்
கைவளைவிற்றுக் களைந்ததும் தமிழே
மதுரையின்வடக்கு வாயிலாற்சோழனைக்
கதிபெறக்காட்டிய கருணையுந் தமிழே
தண்ணீர்ப்பந்தர் சயம்பெறவைத்தே
யுண்ணீரருந்தியங் குரைத்ததும் தமிழே
பொன்னனையாள்தம் புகழ்மனை புகுந்தே
தன்னிகர்வாதஞ் சமைத்ததும் தமிழே
மாமனாகவே வழக்குரையாடித்
தேமெனப்பேசிச் செயித்ததும் தமிழே
விறகுசுமந்து விற்றதும் தமிழே
பாணர் தனக்கும் பகர்தருமிக்கும்
திருவாய்மலரச்செழித்ததும் தமிழே
மண்ணைச்சுமந்து மாறனடித்த
புண்ணைச் சுமந்து புகன்றதும் தமிழே
ஐயாறதனிற் சைவனா யெழுந்தே
வழக்குரையாடி மலர்ந்ததும் தமிழே
இன்னுமெம்பெருமா னிவ்வுலகத்தினில்
ஆற்றிய ஆடலனைத்தையும் ஓரின்
செந்தமிழ்ப்பெருமை செப்பவும் போமோ
இவ்வாறுயதெய்வநன்மொழியைச்
சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையரிற்
கலியெனக்கூறுங் காலக்கொடுமையால்
கற்கவுங் கேட்கவுங் கருதாதந்தோ
சோறதுகொண்டு பீறலடைக்கும்
இம்மைச்சுகமே மெய்மைச்சுகமென
வேற்றுப்பாஷையை விரும்பிக்கற்றே
அந்நியநாட்டி லவதரித்தவர்போல்
இன்றுதான் கப்பலில் இறங்கினாற்போலப்

பேசவும் எழுதவும் பிரசங்கம் புரியவும்
பழக்கமில்லையெனப் பருமிதம்பகர்வர்
அறம் பொருளின்பம் வீட்டையும் நூற்பெருக்கம்
வடமொழி தென்மொழி வாய்ந்துளபோல
எப்பாஷையிலும் இலையென எண்ணார்

இதனால்

தெய்வத்தியானமே சிந்தையில் வையார்
தானதருமந் தவஞ்செய முயலார்
தீர்த்தயாத்திரைக்குச் செல்லவுந் துணியார்
கோயிலில் நுழைந்து கும்பிட நாணுவர்
நாத்திகம்பேசி நாத்தழும் பேறுவர்
சந்தியாவந்தனந் தான்செயமறந்தார்
அந்நியமதத்தி லநேகரை விட்டனர்
லலாட சூன்யராய் நாடெலாந்திரிவர்
ஒருமயிர் நீப்பினுயிர் விடுங்கவரிமான்
அனையமாபி லவதரித்திட்டவர்
குஞ்சி யழகெனக் கூறுவண்ணம்
முண்டிதமெனச்சொல மொய்ம்மயிர் நீக்குவர்
சான்றோர் வகுத்த சாதியாசாரம்
வேண்டுவதில்லையென விதண்டைகள் பேசுவர்
பலமதத்தினரொடும் பகருணவுண்பார்
விதவாவிவாகம் விதியென விளம்புவர்
ஊக்கமது கைவிடேலெனுமரீதிக்
கூக்கந்தரு மதுவாமென வருந்துவர்
இன்னுமிங்கேயா மியம்புதற்கரிய
அநாசாரமெல்லாம் ஆஸ்தியாப் பெற்றனர்
தாயை மறந்தவர் தானுறுங் கேடெலாம்
இவர்களு மடைவரென்றியம்பவும் வேண்டுமோ
ஆதலாலினிமே லாகிலுந் தமிழாம்
பெற்றதாயைப் பேணுவோராகி
உய்யுமின் உய்யுமின் உய்யுமின்னீரே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
நாகை "நீலலோசனி" பத்திராதிபர்.

# கருமியின் அருநிதி.

## 1. தனிக்குடிசில்.

"கரங்களைத் தூக்குங்கள்!"

இவ்விரண்டு வார்த்தைகளும் ஓரிளையோனிடமிருந்து மின்னலின் வேகத்தையும், இடியின் முழக்கத்தையுமொப்ப வெளிப்போந்தன. திடீரெனக் கதவுதிறக்கப்பட்டு அந்த பலத்தவசனங்கள் செவியிற்றாக்கவே சீக்காளியாம் கிழவனது கட்டிலின் இருபாலும் நின்றவிருவர் காளைப் பருவம் வாய்ந்து எழுரைப் பிஸ்டல் அசையாமற் றங்களைக் குறித்துப் பிடித்திருக்கும் ஒருவனைக் கண்டனர்.

"கரங்களைத் தூக்குங்கள்!", என மறுபடியும் ஒலிக்கவே, அவ்விருபாதகர்களின் கரங்கள் தலைமீது உயர்ந்து நின்றன. பெருந்தொனியும் அக்கம்பக்கங்களிற் கேழ்க்கக்கூடாத அத்தனிக்குடிசில் இருவர்க்கெதிரே ஒருவன். படுக்கையிற் கிடந்த முதியோன் கட்டிலுடன் பிணிக்கப் பெற்று, ஆழ்ந்தவிழி, பயமடைந்த பார்வையுடனும் அசையாதிருந்தான். அப்போழ்தைய ஸ்திதி அங்கு பயங்கரமாயிருந்தது. சற்றுப் பின்னிடைவது கூட உயிருக்கே பயமென்று நன்கறிந்த தீரசந்திரன் மேற்செயுங்கருமத்தை ஆராயுங்கால் படுத்த கிழவன், "பிள்ளாய்! அதோ மேஜைமீதுள்ள வெடியாயுதங்களைச் சட்டென கைப்பற்றிக்கொள்! நானொருவனைக்குறிக்க மற்றவனை நீ கவனிக்கலாம். நிம்மதியாகப் பிறகு நாம் பேசக்கூடும்," என்று தழுதழுத்து பெருமூச்சுடன் உரைக்கக்கேட்டான். கட்டுண்ட கிழவனால் யாதுமியலாதென நினைத்த தீரசந்தரன் வியக்கும்படி வற்றிய கையொன்று பிணிக்கயிறின் கீழிருந்து பக்கத்தில் நின்ற ஒரு பாதகனுடையை சரேலெனப் பற்றியது. தக்ஷணமே தீரன் மேஜையையடைந்து இருதுப்பாக்கிகளையும் கவர்ந்து தன் சட்டைப்பைகளிற் செலுத்திக்

கொண்டான். என்றாலும், தன் எதிரிகளின் பார்வையால் தீரன் பயப்படாதிருக்கவில்லை.

"குமரா! இப்பொழுதும் என்குறிதப்பாது. அக்கருவிகளி லொன்றை என்கையிற் கொடு," எனக் கிழவனுரைக்கச் சிறுவன் திருடர்களை நோக்கி, "கைகளை சற்றும் தணிக்காமல் அந்த நாற்காலிகளில் உட்காருங்கள்; இல்லையேல் உமதாவியை அவிப்பேன். உங்களிருவரையும் நான் ஒருவனாக சமாளிப்பேன். மூன்று ஈய உருண்டைகள் உங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்து பிஸ்டலி ஒன்று மிகுதியாக்குவேன். இரக்கமின்றி உங்களை வீழ்த்துவேன்", என விளித்தான். தாங்களெதிர்பாராதபடி திடீரென நிகழ்ந்த இடையூறையுன்னி, வேறுவழியற்று, மெதுவாகப் பின்னிடைந்து, குறித்தவிடங்களில் அமர்ந்தனர் அந்தகப் பேயர். தீரனும் ஓர் பிஸ்டலைக் கிழவனுக்கீந்தான்.

"திருப்தியாயிற்று! கூடுமானாலிக்கயிறுகளைச் சிதைத்து விடு. மயிற்காலில் தொங்கிய என்னாவி அதுவறுபடாமற் சமயத்தில் உன்னாற்காக்கப்பட்டது. கட்டினின்றும் விடுவித்தாய்; இனி யெழுந்து உட்காரலாகும். உன்னையன்றி என்கதி அதோகதியா யிருக்கும். ஏதும் தக்கைகம்மாறாகாது", என்று தன்தளர்ந்த குரலாலும், நீர்வடிந்த விழிகளாலும் நன்றியை யுணர்த்தி முதியோன் புகன்றான். நிகழ்ந்த விவரத்தை வினவிய தீரனுக்குக் கிழவன், "கெம்புச் சுரங்கத்திலுள்ள பேராசைக்காரனைப்பற்றி நீ கேட்டிருப்பாய்!" என்றான்.

"புதிதாகவக்கனிகளிடம் வந்ததால் இதுவரை நான் கேட்டதில்லை. தற்செயலாக இவ்விடம் போந்தேன்." என்றான் தீரசுந்திரன்.

கிழவன் :—"இக்கள்வர்கள் என்னையும் என்தேட்டத்தையு மறிவார் போலும். என்னாயுளிற் பெரும்பாகம் இங்குகழித்தேன். நான் சேமித்ததில் ஓர் தூசியும் எவருக்குங் கொடாது யாதொரு பாங்கிகளிலுஞ் சேர்ப்பிக்காது ரகசியமாக வைத்திருக்கிறேன். எனக்குக் கூட்டாளியுமில்லை; வேலைக்காரனுமில்லை, எனது நிதி



யின் துகை, இருப்பிடம் நானுரைத்தாலன்றி யாருமறியார்", எனக்கூறி, கொடியவர்களின் கிருத்திரிமத்தையும் அவர்கள் பார்வைகளையும் நோக்கிக் கடுங்கோபமடைந்து, துப்பாக்கியைக் கெட்டியாகப்பற்றியபடி, "அப்பா! அவர்களை நான் கவனித்துக் கொள்வேன். அதோ நெருப்பண்டையுள்ள இரும்புக்கம்பிகளை நன்றாய்க் காய்ச்சி அவ்விருவர் நெற்றிகளிலும் வலக்கைகளிலும் ஆழக்குறுக்குச் சூடுபோடு. எக்காலும், எங்கும், யாரும் இனிக் [illegible]றிக்கக்கூடுமாறு அழியாவடையாளம் புனைந்து உலகிற்றிரியும்படி இங்கிருந்திவரை வெளியேற்று. ஏனையவற்றைப் பிறகு கூறுவேன்" எனப்படபடப்பாய் உரைத்தான்.

அக்குடிசிற்குச் சமீபத்தில் வேறுவீடு, ஊர் ஒன்று மில்லை. அக்கொடியவருக்குப் பிரிதுசிந்தை தோன்றாமல் தீரனும் சூடு போடவியைந்து, கம்பிகளைத் தீயிலிட்டு, கள்ளர்களைக் கெட்டியாகக் குரிச்சிகளிற்கட்டிச் சூடு கோலையெடுத்து, ஒவ்வொருவன் நெற்றியிலுங் கையிலும், அவர்கள் ஊளையிட்டுக் கூவியதை அதட்டி யமர்த்தி, இம்மாதிரிக் (×) குறிகளைச் சுறுசுறுப்பாகவும், ஆழவு மிட்டு, இருவர்கைகளையுஞ் சேர்த்துக்கட்டி, வேறு பிணிப்புகளைத் துணித்துவிட்டான்.

"இனி இப்பேயர்களிங்கு சீக்கிரம் வாரார் நாளை துறைமுகம் போக எத்தனித்திருந்தேன். இதற்குள்ளேயே என்னைக் கொள்ளையிட வந்தீர்கள். சிறிதுநேரம் நீங்களே மேம்பட்டிருந்தீர்கள். இன்றுற்ற கற்பனை உங்களால் மறக்கற்பாலதன்று. இளம்பிராயத்தில் தாய்மடியினின்று கடவுளென்றும், காக்குந் தேவதைகளெனவுங் கற்றதற்கொப்ப என்னைக்காத்த தேவனுமிச்சிறுவனைப் போற்றுதல் என்கடனாகும்.

'பலவுலகுதவிய பரைமகிழ்பயலவ
வுலைவறுபவமய லொருநர் பிறரெவர்'.

'எளியேமுக்குறவுநீ யாவர்க்குமிறைவனீ
அளியோடுகாப்பவனீ அறவாழியங்கடனீ
முழுமதியிற் சுந்தரனீ முன்னமுன்னச்சுவைப்பவனீ

கெழுமுமையாள்பாகனீ கெடுவில்வெண்காடுடையவனீ."

எனவுமின்னும் ஏதேதோ கிழவன் பாடுவதையும், அவன் கண்கள் சிவக்கவிழிப்பதையுங்கண்டு, அக்குறிகளை ஜன்னியின் வேகத்தாலெனவறிந்த தீரன், கள்ளர்களை நள்ளிருளில் வெளிப்போக்கிக் கதவைத்தாளிட்டுக் கிழவனைத் தொட்டுப்பார்த்து, அவனுக்குச் சுரங் கடுமையாயிருந்ததைக்கண்டு, இராப்பொழுது நோயாளிக்குதவியாக அக்குடிசிற் கழிக்கவெண்ணினன்.

## 2. ஓர் ரகசியமும் ஏற்றகடனும்.

இரண்டுமணி நேரம் நோயாளி பிதற்றிக்கொண்டே யிருந்தான். அங்கு கிடைத்த ஆகாரத்தைத் தீரனுட்கொண்டு கிழவனுக்கும் கொஞ்சம் தேத்தண்ணீர் செய்துகொடுக்கவே அவன் சோர்ந்து உறங்கலானன். இரவு நிச்சப்தமாயிருந்தது. குடிசிருந்தவிடம் சின்னுட்களுக்குமுன் ரத்தினவகைகள் தேடவந்தோரால் சந்தடி பெற்றிருந்தது. கனிகளைக் கூடியவரை தோண்டிக் கிடைத்தமட்டும் கவர்ந்து 'அற்றகுளத்தி னருநீர்ப்பறவை, போல எல்லோரும் வெவ்வேறிடஞ் சென்றனர். இக்கிழவன்மட்டும் நல்லதோர் குடிசு சமைத்துத் தங்கியிருந்தனன். பகற்பயணத்தாலும், இரவில் எதிர்பாராநிகழ்ச்சியாலும் களைப்படைந்த சிறியவனும் ஓர் சாய்வுநாற்காலியிலுட்கார்ந்து தன்னையுறியாது நித்திரை கொண்டான். விருத்தன் விழித்து, "பிள்ளாய்! நீ இன்னுமிங்கே யிருக்கிருயா? நல்லது" என்றது காதிற்பட்டே தீரனும் விழித்தெழுந்து, நோயாளியின் முகமலர்ச்சியால் அவன் ஜ்வரம் குறைந்திருப்பதாக வறிந்து, கொஞ்சம் பால் குடிக்கக்கொடுத்தான்.

கிழவன் :—" நாற்காலியைக் கிட்டக்கொணர்ந்துட்காரு, என்னுள்ளம் சாந்தியடைந்திருக்கிறது. மேற்கூரையைப் பொத்துக்கொண்டு பொழிந்ததென வென்னுதவிக்கு வந்த சிறுவ! இதுகாறும் எனது மனக்கோளை எங்ஙனந் தீர்ப்பது; யாரை நம்புவதென்று தெரியாதுழன்றேன், இனிச் சமாதானத்துடன் சாவேன், நாளை நான் செல்ல நினைக்கும் நகரத்திலும் எனக்குற்றோரிலர். கருணாநிதியாமீசனே உன்னை யீண்டனுப்பினர். ஆகவே, இன்றிரவு நீசெய்த உபகாரம் முதலாகவும், இனி நானுன்னைச் செய்ய



வேண்டுவதன் வட்டியாகவுமேற்படும். முன்போலவே இன்னு[illegible]ள தொந்திரவையும் மேற்கொள்வாயென்று நம்புகிறேன்".

தீரன் :—" பெரியவரே! இதுவரை யென்னைக் கண்டதுமில்லை; என் பெயரையும் நீரறிந்திலர். உமது நம்பிக்கைக் கெப்படி நானிலக்காவேன்?"

கிழவன்:—"பெயரைப் பொருட்படுத்த மாட்டேன். அருஞ்சிறுவ! உன்னுள்ளத்தில்லை உன்முகம் மறைக்கவில்லை; தற்காலம் பெயர்மாற்றித் திரிவோர் வெகுவாயுளர், முகமாற்றல் அவ்வளவு லேசல்ல, ஆகையால் உன்னையறிந்தே 'பெருஞ்சுரங்கத்துக் கருமி' யென வழங்கப்படும் நான். கூறுவதைக் கேட்பாயாக.

" நடுநிலைமையிலுள்ள ஓரிந்தியன் நான். என் குடும்பம் நேர்த்தியான ஸ்தாவர ஸொத்து அடைந்தும், அதைப் பாரமரிக்கப் போதுமான பொருளற்றிருந்தது. ஏனெனில், எனது மூதாதைகளிலொருவர் ஏராளமாகச் சம்பாதித்துத் தக்கவந்தஸ்த்தில் வாழ்ந்துவந்தார், அவரது மனைவி யிறக்கவே அவர்முற்றும்மாறி, வியாகூலமடைந்து, கிருபணத்துவம் மேற்கொண்டொழுகிக் கடாசியாகத் தனது ஜங்கமமனைத்தையும் யாருமறியாதபடி ஒளித்துக் காலஞ் சென்ருர். பிறகு அக்குடும்பத்தார் எவருக்கும் அதுகிட்டவில்லை. என் தமயனும் நானுங்கூட வீடுநிலங்களிலெங்கும் பரிசோதித்தும் பெற்றோமில்லை, என் தகப்பனும் கைப்பணமின்றியே தன்வாணாளைப் போக்கினர்."

தீரன் :—" பொருளிருந்து புதைபட்டது வாஸ்தவமானல் ஏதேனுமடையாளத்தால் அதுவெளிப்படுமே".

கிழவன் :—" அப்படிக்கொன்றுமே தெரியவில்லை. அந்தப் பெரியவர் எப்பொழுதும் உபயோகித்துவந்ததாகத்தெரிந்த ஓரறையின் கதவு ஜன்னல் சுவற்றுப் பலகைகளையுங்கூடத் தோண்டி நன்ருகப் பரிசோதித்தும் பலனற்றது. மேலும், அவ்வறை பேயடைந்து, பொருளைப் புதைத்தவரைப்போன்றவொருவுருவம் இரவுகளில் அவ்வறையைச் சுற்றிவந்து அப்பொருளைக் காத்துவருவதாகவும் வதந்தியுண்டு. எனக்குப் புலப்படவில்லை. என்

சோதனையிலும் ஒன்றும்தென்படாததால் பலகை முதலியன மறுபடி முன்போலப் பொருத்தப்பட்டன".

தீரன் :—" இப்பொழுது அங்கு யார் வசிக்கிறார் ?"

கிழவன் :—தாரமிழந்த என்னண்ணன் தன்னொரு மகளுடன் இருக்கிறார். முப்பது வருஷமாக நானவரைப் பார்க்கவில்லை. வெகு நாட்களுக்குக்கொருமுறை எங்களுக்குள் கடிதப்போக்குவரவிருக்கிறது. என்வேலைமுடிந்தவிப்போது அவரைச்சேர எவ்வளவு ஆசைப்படுகிறேன் !"

தீரன் :—" உமது வேலை யாது? அண்ணனைச் சேரத் தடை என்ன ?"

கிழவன் :—" என் ! கடனில்முழ்கிய எனது பூர்வீக ஆஸ்தியை மீட்பதே இங்குபொற் குவியலையடைந்த என் வேலை. கேழ்வையுற்றகனிகளுள் நானுழைக்காததில்லை. அபூர்வ சம்பவங்களைக்கண்டு, கேட்டு, செய்துமிருக்கிறேன். கொள்ளை கொடுத்திருக்கிறேன். கனத்தொந்திரைப் பட்டிருக்கிறேன். என்றாலும் 'கொக்குக் கொன்றே மதி' யாகக்கருமமே கண்ணாயினேன். எனது விடாமுயற்சி, என்னிடுக்கண்களைப் பொருட்படுத்தாது கடைசியிற் பயனளித்தது. ஐம்பதினாயிரம் பொன்னீட்டப் பாடுபட்டேன். இப்பொழுதுதான் அத்தொகையைச் சேகரித்தேன், ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக ஐந்நூறுகாகிதங்களை வீடுசேர்க்கத்தயாராகவிருக்கிறேன்."

தீர:—" நீர், நெருப்பு, காவர்களுக்கிறையாகும்படி அப்பெருந்தொகையை இவ்வற்பக்குடிசிலிலா வைத்திருக்கிறீர்!"

கிழ:—" அதனிருப்பிடத்தை நீ பார்த்தால் மெச்சலாகும். பத்திரப்படுத்துந் தந்திரம் மீன்குஞ்சுக்கு நீச்சுக் கற்பிக்கவேண்டா வண்ணம் என்குடும்பத்திற் சுபாவமாயுள்ளதுபோலும். உன்னைக் கண்டபிறகு ஊர்சேரவேண்டிய ஆசையுமில்லை. கடற்பிரயாணத்துக்கொத்த தேகதிடமுமில்லை. வீணேயாசைப்படுவதில் என்ன பயன். வீட்டிலொளித்து மறித்தவர்குலத்தில் வெளியிலொளித்து மறிப்பேனேவென்றையுற்றிருந்த என் சங்கைபோக்கவந்தாய்.



விடியுங்காலமாவதால் தேட்டத்தை உனக்குக்காண்பிவிக்கிறேன். அதற்குள் பாக்கியையும் உனக்குச் சொல்லுகிறேன்."

பிறகு கிழவனுரைத்ததெல்லாம் தீரசுந்தரன் கவனமாகக் கேட்டுத் தன்புத்தகத்திலங்கங்கே குறித்துக் கொண்டான். சூரியனுதித்ததும் வெளிப்போந்து கிழக்கேயுள்ள குன்றினுச்சிக்குச் சமமாக முதற்கிரணம் குடிசுக்கெதிரேயுள்ள ஓர்குட்டிச்சுவற்றில் தாக்குமிடத்தைக் கவனித்துச் சென்று சுவற்றைக் கெல்லவே, அதன் மண்மேற்பூச்சுக்குள் ஓர் துவாரந்தோன்றக்கண்டான். அப்பிலத்தினுள்ளிருந்த ஓரிரும்புச் சிறியபெட்டியை எடுத்துக் கொண்டு குடிசுக்கு வந்தான். அப்பேழத்தைக் கண்ணுற்ற வயோதிகன் முகம் மலர்ந்தது. அதைக்கைப்பற்றிப் படுக்கைமீதிருத்தித் தன்தலையணையினோர் மூலையைக்கிழித்துத் தந்திரமாகத்தைத்து மறைத்துவைத்த சிறிய திறவுகோலை யெடுத்துப் பெட்டியைத் திறந்து சிறியதொன்றும், அதற்கிரண்டத்தனையுமான இரண்டு தோற்பைகளை யெடுத்தான். பைகளிரண்டையும் யாரும் உடையிலொளித்துச் செல்லக்கூடும். பெரியதைத் தீர சுந்தரனிடங் கொடுத்துக் கிழவன்,

"இதை நம்மிந்தியாவுக்கெடுத்துச் செல். அங்குசேர்ந்ததும் பையைத்திரந்து அதனுள் முத்திரையிட்டுள்ள கடிதத்திற் கண்டபடி செய்வாயாக. நான் வற்புறுத்திச் சொல்லவேண்டிய தெல்லாம் இந்தப்பை உனது சரீரத்தை விட்டுக் கணமேனுமகலக்கூடாதென்பதும், நீயே இதையெடுத்துச் செல்லவேண்டுமென்பதுமே. உனக்கும் நஷ்டமில்லை. இதோ பார்! இந்தச் சிறிய பையினடக்கம் உன்னுதவிக்கெல்லாம் கொஞ்சமேயாயினுங் கைம்மாறாகட்டும், எனக்கினி யாதொன்றுந் தேவையில்லை. பெரிய பையை உனதுயிர்க்குச் சரியாகக்காத்து நந்தாய்நாடு சேர்ப்பேனென்று கையடித்துக்கொடு. சாகுந்தருவாயிலுள்ள வெனக்கு மனச்சாட்சியாக உரைதருவாயாக."

தீர:—" ஐயா! இப்பெரும் பாரத்தை என்றலை மீதேன் சுமத்துகிறீர். நீரே உமது விரதத்தைச் சமாப்தி செய்ய அட்டி

யாது? மேலும் என்னைப்பின்பற்றி யாரேனு மிதைக் கொள்ளை கொண்டாலோ?"

கிழ:— "மைந்த! நீ சிறுவன்: பலசாலி: ஊக்கமுள்ளவன்: நம்பத்தக்கவன், உன்வார்த்தையே பிரமாணமாம், உன்னுடையில் இந்தப்பைகளை நானே இதோ மறைத்துவிட்டேன். அப்படிக் கொள்ளைபோனால் நீ ஜவாப்தாரியாக மாட்டாய். என்னையே என் கடனைத்தீர்க்கச் சொல்கிறாய். அது கூடாத காரியம். என்னந்திய காலஞ் சமீபித்துவிட்டது. கடல் மீனுக்கிரையாவதிலுந் தகனக் கிரியையே நம்முள் மேம்பாடாகும். இன்னுமிந்தத்தொகையை என்னண்ணனிடம் சேர்க்க வேண்டியதைத் தவிர இதரத்தேவை யற்ற நான் இந்தியாவில் என் செய்வது. ஆகவே இனி மறுப்பதிற் பயனில்லை. தடையின்றி நிதியை யுற்றவிடத்திற் சேர்ப்பாய். விரட்டிவரும் மரணத்துக்குத் தயாராக விருக்கிறேன். மனச்சாந்தி பெற்றேன்," எனக்கூறி ஆனந்தபாஷ்பம் உதிர்த்தான்.

சுந்தரனும் பெருங்கடனை வேறுவழியின்றி யேற்று, தானிந்தியா சேரும்வரை தன்னுயிர் போனாலன்றி பெரியவர் தனம் தன்னுடலை விட்டகலாதென்று வற்புறுத்தி வாக்குரையீன்றான்.

(தொடரும்)

P. K. சர்மா.

# பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம்.

இப்பூலோகத்தில் பலமானிடர் ஒவ்வொவரும் ஆதிகாலமுதற் கொண்டு தான் எப்படி உண்டாயினர் என்றும் இப்பூமி எவ்வாறு உண்டாயிற்று என்றும் அறிய ஆவலுற்று சிந்திக்கலானார்கள். ஒவ்வொருகாலத்திலும் வசித்துவந்த ஒவ்வொருவரும் தன்னைச் சுற்றியிருக்கும் ஆகாயம் காற்று முதலிய வஸ்துக்கள் எவ்விடமிருந்து எவ்வாறு எதற்காக உண்டாயிற்று என்று நினைத்து



நினைத்து தங்கள் காலத்தை செலவிட்டு மிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தன்னைச்சுற்றியிருக்கும் வயல்களின்வனப்பையும் மலைகளின் உன்னத பெருமையையும் அகன்ற சமுத்திரத்தின் கம்பீரத்தையும் நோக்கி ஆனந்தமடைந்திருக்கின்றனர். தன்னைச்சுற்றியுள்ள வஸ்துக்களைப்பற்றி சிந்தித்தது போலவே தன்னைப்பற்றியும் சிந்தித்து இருக்கின்றனர். 'தான்' 'நான்' என்பது என்னவென்றும் எங்கிருந்து எப்போது எதற்காக சிருஷ்டிக்கப்பட்டானென்றும் மனதில் எண்ணி எண்ணி சிரமப்பட்டு அவரவர்க்கு உண்டான கருத்துக்களை அவர்களின் பின்வந்த நமக்கு ஒரு நிதியாகவைத்து விட்டுப்போயிருக்கிறார்கள். இவ்வாறு மனனம் செய்து கருத்து வெளியிட்டவர்களில் சிலர் பெரிய மதாசாரியர்களாக இருக்கிறார்கள். சிலர் தத்துவ சாஸ்திரவிற்பன்னர்களாக இருக்கிறார்கள், சிலர் வானசாஸ்திரிகளாகவும் பிரகிருதி நூலாசிரியர்களாகவும் இருக்கிறார்கள்.

இவ்வாறு இவ்வகைப் பெரியார்கள் தங்கள் நாட்களை இவ்வாராய்ச்சிகளிற் செலவழிக்க பலமதங்கள் உண்டாகவும், அம்மம் மதங்களில் இருப்பவர்கள் தங்கள் தங்கள் மதாசாரியர்கள் உரைப்பது சரியென்றும் வழக்குரைத்துவந்து மிருக்கிறார்கள்.

ஆயினும், பிரகிருதி நூலாசிரியர்கள் மட்டிலும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடவே, பின்காலத்தில் தோன்றியவர்கள் பயன்பட காரணம் உண்டாயிற்று. இவ்வாறான நூலாசிரியர்கள் பிரகிருதியின் ஆரம்பம் மாறுதல் முதலியவைகளை வெளியிட்டிருப்பதை இதனடியில் பலரும் எளிதில் அறியும் பொருட்டு தொகுத்து எழுதியுள்ளேன். அவைகளில் இருக்கக்கூடிய குற்றங்களைகாட்டி களைந்தும் குணங்களை ஏற்றுக் கொள்ளவும் இப்பத்திரிகையை வாசிக்கும் ஒவ்வொரு சகோதர சகோதரிகளை வணக்கத்துடன் வேண்டுகிறேன்.

## நாம் வசிக்கும் உலகம்

நாம் வசிக்கும் பூமி ஒரு பெரியதலம். அது ஒரு உருண்டை வடிவமாயிருக்கிறது. நமது தோற்றத்துக்கு இவ்வுலகம் பெரியதும்

அகன்றது மாகத்தோன்றுகிறது. ஆயினும் பிரபஞ்சமென்னும் பெரிய பரப்பில் இது வெகு சிறியதான புள்ளிபோன்ற ஒரு இடம் இவ்வாச்சரியத்தை நாம் ஆராய்ந்து படிப்போம். இப்பிரபஞ்சத்தைப்பற்றி யாராய்வோம். இப்பூமியைப்பற்றியும் அறிவோம்.

## பிரபஞ்சம் என்றால் என்ன?

பிரபஞ்சம் என்பது ஒரு பரந்தவெளி. அதற்குமேல் என்பது மில்லை கீழ் என்பது மில்லை, திக்குகள் என்பதுமில்லை. ஏனெனில் அப்பரந்த வெளியின் எல்லையைப்பற்றி நமக்கு தெரியாது அது, சுத்த ஆகாய மயமாயுள்ளது. இவ்வாகாச மயத்தில் அநேக வஸ்துக்கள் மிதக்கின்றன. உதாரணமாக, பரந்த வெளியான ஒரு மைதானத்தில் நல்ல காற்று அடிக்கும் காலத்தில் இருந்துபார்ப்போம். பல தூசிகள் அசைந்து கொண்டு காற்றில் ஒரு இடமிருந்து மற்றொரு இடத்தை நோக்கிப்போய்க்கொண்டு கீழேவிழாமல் தொங்கிக்கொண்டிருக்கின்றனவல்லவா? அப்போது ஒரு சிறிய குருவியின் இறக்கை அல்லது பருத்தியின் சிறுதுண்டு ஒன்று, இருந்தால் அது கீழேயும் மேலேயும் போய் ஆடிக்கொண்டு அசைந்து போவதைபார்ப்போம்.

அது போல பிரபஞ்சம் என்னும் அகண்ட இடத்தில் இப்பூமி, மிதந்து கொண்டு அசைந்து வருகின்றது. இப்பூமி மட்டும் தான் அசைந்து மிதக்கிறதோ? இல்லை. அநேக கோடிக்கணக்கான வஸ்துக்கள் பிரகாசத்துடனும் உஷ்ணத்துடனும் உலாவி வருகின்றன. இவ்வாறு பிரகாசத்துடன் இருப்பவைகளின் பெயர் நக்ஷத்திரங்கள்.

## நக்ஷத்திரங்கள்.

இந்தவிதமாய் ஜ்வலிக்கும் நக்ஷத்திரங்களின் கணக்கு அறிந்தவர் ஒருவருமில்லை. நமது கண்ணுக்கு இவ்வளவு நக்ஷத்திரங்களும் ஸ்திரமாக ஒரு விடத்திலேயே இருப்பதுபோலவே தோன்றும். ஆனால் அவைகளெல்லாம் ஆகாயமயத்தில் உலாவுகின்றன. மனிதர்கள் வெகுகாலமாக அவைகள் ஒரே இடத்தில் இருப்பதாகவே எண்ணி வந்தார்கள். இவைகள் வெகுதூரத்தில் இருப்பதாலும்



கணக்கற்றவைகளாக இருப்பதாலும், இவைகளின் சலனம் நமது கண்ணுக்கு புலப்படாது. ஆயிரக்கணக்கான வருஷங்கள் அவைகள் அசைந்து கொண்டுவந்தபிறகேதான் அவைகளின் சலனத்தை நாம் கொஞ்சம் அளவிடலாகும். இது என்ன ஆச்சரியம்! இந்நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மண்டலமாகும். கணித சாஸ்திரிகள் அவைகளில் சில நக்ஷத்திரங்களின் தூரம் மட்டும் எவ்வளவென்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆயினும் நிச்சயமாய் இவ்வளவு தூரம் தான் இந்நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவென்று சொல்லமுடியாதென்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு அறிகிறார்கள் என்றால் ஒவ்வொரு நக்ஷத்திரமும் பிரகாசம் கொடுக்கிறபடியால் அதன் வெளிச்சம் நமது பூமிக்கு வந்து சேர எவ்வளவு காலம் ஆகிறதென்று பார்த்து, பிறகு வெளிச்சகிரணம் ஒரு விநாடிக்கு அல்லது மணிக்கு இவ்வளவு மயில் போகிறதென்பது தெரிவதால் அதைக் கொண்டு கணக்கிட்டு, நக்ஷத்திரங்களின் தூரத்தை கணக்கிடுகிறார்கள்.

## வெளிச்சக்கிரணம் என்பது என்ன?

ஒவ்வொரு வெளிச்சமும் நமது கண்ணுக்கு எவ்வாறு புலப்படுகிறதென்பதை ஆராய்வோம். வெளிச்சம் இருக்கும் வஸ்துவிடமிருந்து பல கிரணங்கள் உண்டாகின்றன. அக்கிரணங்கள் (Rays) நாலாபக்கமும் போகின்றன. அவ்வஸ்துவிடமிருந்து சில கிரணங்கள் வந்து நமது கண்ணைச்சேர்கின்றன. அதனால் நாம் அவ்வஸ்துவை பார்க்கிறோம். இவ்வாறு அவ்வஸ்துவிடமிருந்து வரும் கிரணம் நமது கண்ணுக்கு வரும்போது எவ்வளவு வேகத்தில் வருகிறதென்று கணக்கிட்டிருகிறார்கள். அவர்களின் கணக்கை பின்னால் விவரமாய்ப் படிப்போம்- இப்போது ஒரு கிரணம் ஒரு வருஷத்தில் 5,840, 000, 000, 000 மைல் போகிறதென்று சொல்லும் சங்கதியை மட்டும் எத்துக்கொள்வோம். இப்போது ஒரு நக்ஷத்திரத்திலிருந்து வரும் வெளிச்சக்கிரணம் ஒருவருஷம் பிறகு பூமி வந்து சேருமானால் அந்நக்ஷத்திரம் 5,840, 000, 000, 000, மைலுக்கு அப்பா லுண்டென் றெண்ணுகிறோம்.

144019. JL
031m211, N23PY
N23.1.1

### தூரதிருஷ்டிக் கண்ணாடி.

இவ்வாறு வெகுதூரத்திலிருக்கும் வஸ்துக்களை நாம் நமது கண்களைக் கொண்டுபார்ப்பதில் நன்கு தெரியாமல் இருப்பதையுத் தேசித்து சாஸ்திர விற்பன்னர்கள் வெகு கஷ்டப்பட்டு தூர திருஷ்டிக்கண்ணாடி என்னும் கருவியை உண்டுபண்ணி யிருக்கிறார்கள். ஜ்யோதிட உப்பரிகை (observatories) களில் வானப்பொருள்களை பார்த்து பரீக்ஷை செய்ய கணக்கற்ற குவியல்களான பணத்தை செலவிட்டு இக்கருவிகள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக லிக்என்னும் இடத்து ஜ்யோதிட உப்பரிகை (Lick observatory) யில் இருக்கும் தூர திருஷ்டிக் கருவியைச் செய்வதில் 19 தடவைகளில் பிசகாகப்போய் கடாசியில் சரியான படி அமைந்தது. அக்கருவியைக்கொண்டு பார்க்குங்கால் வெகு தூரத்திலிருக்கும் வஸ்துக்கள் சமீபமாகத் தெரிகின்றன. இவ்வித கருவிகளில் பெரியதாக செய்த தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக்கொண்டு மேற்கூறிய நக்ஷத்திரங்களைப் பார்த்தாலுங்கூட அவைகள் வெகுதூரத்தில் இருப்பனவால், சிறிய வெளிச்ச முள்ள வஸ்துக்களாகவே தோன்றுகின்றன. மிகவலிமையுள்ள தூரதிருஷ்டிக் கருவிகளைக் கொண்டு பார்க்குங்கால் சிற்சில நக்ஷத்திரங்கள் மட்டும் சுழலுந்தன்மையுடைய அக்னி ஜ்வாலைகளாக இருப்பதையறிகிறோம். இஜ்வாலையை நாம் நக்ஷத்திரகணமென்றும் தாராகணமென்றும் கூறுகிறோம். (Nebula.) இந்நக்ஷத்திரகணத்திலிருந்துதான் பிண்டமாக உருவடைந்தவை நக்ஷத்திரங்களாகும்.

### சூரியன்.

இவ்வாறு ஜ்வாலைகளாகத் தெரியும் சிலவஸ்துகளில் ஒன்று மட்டும் மிகத்தெளிவாய் இருப்பதாக அறிகிறோம். ஏனெனின் அதுவே நமக்கு மற்றவைகளைவிட சமீபமாயுள்ளது-அதன் பேர்தான் சூரியன். சமீபமாயிருத்தலால் மனிதர்கள் அதைப் பற்றி கொஞ்சம் அதிகமாய் அறியக்காரணம் ஏற்பட்டது. இப்பூமியினின்று சுமார் 9 கோடி மைலுக்கு மேலே தூரமாயுள்ளது. அது ஜ்வாலையை கக்கும் ஒரு பரப்பாயுள்ளது. அதன் குறுக்களவு 8½ லக்ஷம் மைலுக்கு மேலே யுள்ளது. நமது பூமியின் காத்திரத்தைவிட பனிரெண்டு லக்ஷம் மடங்கு அதிகமாயுள்ளது.



இத்தாலியாதேசத்தில் கையூர் டாணோ புருணோ-Giordano Bruno-என்பவர்தான் முதல் முதலில் இப்பிரபஞ்சப்பரப்பில் பலகோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் இருப்பதில் ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு மண்டலமென்றும் சூரியனும் ஒரு நக்ஷத்திரமென்றும் கண்டு பிடித்தார்.

### சூரிய மண்டலம்

ஒவ்வொரு நக்ஷத்திரமும் மேலே சொன்னபடி அனல் கக்கும் ஜ்வாலையாயிருக்கிறது. சூரியனும் ஒரு அனல் கக்கும் ஜ்வாலைப் பரப்பு என்றும் சொன்னோம். சூரியனைச் சுற்றிலும் எவ்வாறு பூமி முதலிய பல உலகங்கள் இருக்கின்றனவோ, அதேவிதமாய் ஒவ்வொரு நக்ஷத்திரத்தைச்சுற்றி பல உலகங்கள் உண்டு. ஆகவே ஒவ்வொரு நக்ஷத்திரமும் தன்னுடைய வர்க்கங்களாய் தன்னைச் சுற்றி இருக்கும் உலகங்களுடன் இருந்து வேறு நக்ஷத்திரத்துக்கு சம்மந்தப்படாமல் இருக்கிறது. இவ்வாறு இருக்கும் ஒவ்வொரு நக்ஷத்திரம் அதைச்சுற்றியிருக்கும் உலகங்களுடன் ஒருமண்டலமாகும் சூரியனும் அதைச்சுற்றி யிருக்கும் பூமி முதலிய உலகங்களும் சேர்ந்து சூரிய மண்டலமாகும், ஆதலால் நாம் சூரிய மண்டலத்தைச் சேர்ந்த பூமியில் இருக்கிறோம்

(தொடரும்)

K. ஜகதீசன். B. A.

## வேதாந்த வசனம்.

(அல்லது சங்கராச்சாரியாரது தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரம் சுரேஸ்வராச்சாரியாரது மானஸோல்லாஸத்துடன்.)

### முகவுரை.

பக்தர்கள், பகவானுடைய நிர்க்குண ஸ்வரூபத்தை ஆராயப் புகுவார்கள். அதனை அங்ஙனம் ஆராயப்புகுவதற்காக, சுருக்கமாயும், எளிதில் விளங்குவதற்காக, விவரமாயும் அறியும்பொருட்டு,

* பகவத் பூஜ்யபாதர் ஸகலவேதங்களுடைய சாரத்தைத் திரட்டியெடுத்து, பத்து ஸ்லோகங்களாக, ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்திரம் என அருளிச்செய்தனர். அதற்கு அவரது மாணாக்கரான ஸுரேச்வராச்சாரியார் என்பவர் மாநஸோல்லாஸம் என்னும் உரையை உபசுலோகங்களில் தெளிவாகச் செய்தார். ஒவ்வொரு ஸ்லோகம் 'குரு' வால் செய்யப்பட்டது ஒரு அத்தியாயமாகும். மாணாக்கர் செய்த பத்து உல்லாஸமும் பத்து அத்தியாயங்களாகும்.

## நூல்.

### முதல் உல்லாஸம்.

### உலகம் ப்ரஹ்மமான ஆத்மாவினிடத்துள்ளது.

#### கடவுள் வாழ்த்து

1. விநாயகன் எனக்கு மங்களத்தைக்கொடுத்தருளுக ; ஸரஸ்வதி எனக்கு மங்களத்தைக் கொடுத்தருளுக ; மஹேச்வரீ எனக்கு மங்களத்தைக் கொடுத்தருளுக ; சதாசிவன் எனக்கு மங்களத்தைக்கொடுத்தருளுக.

#### ஸ்தோத்திரத்தின் பிரயோஜனம்.

2. மஹரிஷிகள், "ஆத்மலாபத்தைக்காட்டிலும் வேறுலாபம் இல்லை" என அறிகிறார்கள். ஆகவே அந்த லாபத்தை அடைவதற்காக முனிவன் தனது "ஆத்மா" வான பரமேச்வரனை துதிக்கிறான்.

[ லாபம் எனில் பேறு, அடைவது என்று பொருளாகும். ஆத்மா அல்லாத அநாத்மப்பொருள்கள் மாயையாகி, துன்பத்திற்கு இடமாகி, கர்மாநுஷ்டானங்களால் பிறப்பிறப்பிற்குக் காரணமாகின்ற பொய்ம்மையாம். "ஆத்மலாபத்தைக் காட்டிலும் வேறு இல்லை" என ஆபஸ்தம்ப தர்மஸூத்திரத்திலும், கீதையில் தியானயோகத்தில் 22வது சுலோகத்தில் "அவன் எதனை (ஆத்மலாபத்தை) அடைந்து, பின்பு, வேறுலாபத்தை அதினினும் (ஆத்மாவை

* பகவத்பூஜ்யபதர்-ஸ்ரீசங்கர ஆச்சாரிய ஸ்வாமிகள்.



அடைதலைக்காட்டிலும்) அதிகமாக நினைப்பதில்லையோ........" எடுத்துக்காட்டுகின்றன. ஆதலால் ஸகலத்திற்கும் சாக்ஷியாய், அறிவுப்பொருளாய், ஏகமாய், ஜோதியாய், உள்ளே யுள்ளாய், பரப்ரஹ்மமான, நித்யானந்தமான "ஆத்ம ஸ்வரூபத்தை" அடைவதாகிய லாபத்தைத்தவிர வேறு மாயையெல்லாம் லாபமன்று. மற்றும். ]

3. எவன் தனது இச்சையினால் (மாயை என்னும் சக்தியினால்) படைக்கப்பட்ட பிரபஞ்சத்திற் புகுந்து, எல்லாருடைய உள்ளத்தினுள்ளும், வெளிப்பட்டு நிற்கின்றானோ, அந்தப்பரமேச்வரனே இந்தஸ்தோத்திரத்தினால் துதிக்கப்படுகிறான்.

[உள்ளத்தினுள்ளும் என்றது மனத்தினுள்ளும் என்றதாகும்.]

[ "எல்லாருடைய மனத்தினுள்ளும்" என்றதனால் சிருஷ்டி காலத்தில் ஸ்தூல, ஸூக்ஷ்மத்தனுள் பரமாத்மாவின் ஒருபாகமான ஜீவான்மாவாயும், பிரபஞ்சத்தினுட் பரமாத்மாவாயும் இருக்கும் எனதாத்பர்யமாகும், அன்றியும் அந்தப் "பரமேச்வரனே இந்த ஸ்தோத்திரத்தினால் துதிக்கப்படுகிறான்" என்றதனால் மனத்தினுட் ஜீவாத்மாவாயும் வெளியிலுள்ள பரமான்வோடு ஐக்ய நிலையை அடைந்து "சிவமே நான்-நானே சிவம்" என்று சர்வகாலமும் சிந்தனை செய்தலாகும். இதுவே ப்ரம்மாநுபூதியாகும், இதுவே "சிவோகம்" பாவனை செய்வதாகும்.

"அகண்டவறி வானபர சிவமே நானென்
றனவரத மிடையறவே செய்யுந் தியானம்
புகன்றஉபா சனையாகு மதனா லுண்மை
பொருந்தியநற் புந்தியினாற் பரசிவத்தை
நிகழ்ந்திடவே யறிந்திடலா மற்றொன் றாலு
நிராமலமா யறியவொணா ததனாலே
பகர்ந்தகுரு வசனத்தாற் பரசி வத்தைப்
பத்தியுட னென்றுமுபா சிக்க வேண்டும்.
சின்மயமாம் சிவத்தினிடை சித்தம் வைத்துச்
சிவமதுவே நாமென்றிங் கறியா தோர்க்குச்

சின்மயமாம் பரப்பிரமந் தானே யாகிச்
சலியாம லிருப்பதுவாம் விதேக முத்தத்
தன்மையொரு காலத்துஞ் சித்தியாது
தத்துவமாய் நவில்கின்றே னிதாக வென்றே
நின்மலமாய் ரிபுமுனிவன் விதேக முத்த
னிலைபெற்ற விலக்கணமே நிகழ்த்தினனால்" (ரிபுகீதை)

மற்றும் "இச்சையினால்" (அதாவது மாயை என்னும் சக்தியினால்) என்றதால் மாயை மெய் பொய்யென இருவித முண்டு. படைக்கப்பட்ட பிரபஞ்சத்தில் என்றது பொய் மாயையாகும். தன்னையறிந்தால் பிரபஞ்சப்பற்றுவிட்டு பற்றற்றானை பற்றுவார்கள். இதுவே மெய்யானமாயை.

"மாயை யெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின் யாதொன்
றில்லாததுவே
மாயை யெனவிப் படியிருக்க மதிப்பா ரதனை யிருவகையாய்
மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப் பட்டுத்
தனைமறந்தோர்
மாயை பொய்யென் றுரைத்திடுவா மயக்க நீங்கித்
தனையறிந்தோர்

(குமாரதேவர்)

என்ற செய்யுளால் நன்குணரலாம் ]

## 4. மூலகாரணத்தைப்பற்றிய வினாக்கள்.

சென்ற பல பிறவிகளிலே செய்த நற்கருமத்தின் பலனாக ஒரு மனிதன் புத்தி திருந்துகிறது. புத்தி திருந்துவதால் அவன் வேதாகமங்களை கற்றுணர்கிறான். அதனால் அவன் மெய்மாயையின் சிறிது பாகத்தை உணர்கிறான். உடனே அழியிந்தன்மையுள்ள இம்மை மறுமைகளை வெறுக்கிறான். அதனால் அவன் அடக்கம், பொறுமை, அஹிம்ஸை முதலான நற்குணங்களை அடைகிறான். பிறகு ஒரு குருவையடைந்து பின்வருமாறு ஸம்சய முள்ளவைகளை வினவித்தீர்த்துக்கொள்ளுகிறான்.

(தொடரும்.)

**பக்தன்.**

# ஆலயம் தொழுவது.

" பக்தியிற்சிறந்த உத்தமசிகாமணிகாள் !

"ஆலயஞ்சென்று கடவுளை வணங்குதல் நன்று" என்பது எனது கருத்தன்றி "ஆன்றோர்"களின் கருத்துமே ; ஆதலின்,

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபியாகியகடவுளை வணங்கினாலன்றி நாம் மோக்ஷ மடையமாட்டோம். ஜீவான்மாக்களாகிய நாம் ஆணவம், காமியம், மாயை என்னு மும்மலங்களால் கட்டுண்டிருக்கின்றோம். நாம் இவ்வுலகபந்தமாகியபாசத்தை நீக்கி சாக்ஷாத் சிவபெருமானை வழிபாடுசெய்து அவர் அனுக்கிரஹத்தாலன்றி இந்நரசென்மம் விமோசன மாகமாட்டாது. நாமோ படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற்கும் முதல்வராகிய "கடவுள்" ஒருவருண்டென்பதையும், இச்சென்மம் விமோசனமாக வேண்டு மென்பதையும், அடிக்கடி மறந்துவிடுமியல்புடையவர்களாயும், மண், பெண், பொன் என்னும் மூன்றினிடத்தும் நீங்காத பற்றுடையவர்களாயு மிருக்கிறபடியால், நமக்கு "நிமை" யளவு நேரங்கூட கடவுளைப் பற்றிய ஞாபகமே வருகிறதில்லை. இங்ஙனமின்றி, சாக்ஷாத் சிவபெருமானின் ஞாபகமிருக்கவேண்டு மென்பதற் கறிகுறியாக :—

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று"

அதாவது, "கோவிலுக்குப்போய் கடவுளை வணங்குவது மிகவும் நல்லதாகும்" என்று நம்மூலஞானமாதாவாகிய "ஔவை"ப்பிராட்டியாரும் நமக்கெனநவின்றுளர். இவ்வேதவாக்கியத்தைக் கடந்து சிலர் நாகரீகப் பேய்ப் பிடித்து ஆட்டுமிக்கலிகாலத்தின் "கயவர்கள்" "கோவிலுக்குச் சென்று தான் கடவுளை வணங்க வேண்டுமோ? கடவுள் எங்கும் நிறைந்த சர்வவியாபிதானே? கடவுள் தூணிலும், துரும்பிலும், நம் மனத்திலு முள்ளவர்தானே?

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாகி

(தாயுமானவர்)

*

கோயிலாவதேதடா குளங்களாவதேதடா !
கோயிலுங்குளங்களுங்கும்பிடுங்குலாமரே !
கோயிலுமனத்துளே குளங்களுமனத்துளே !
ஆவதுமழிவதுமில்லையில்லையில்லையே ! (சிவவாக்கியர்)

என்று இம்மஹான்கள் கூறியிருக்கின்றார்களே ! மேலும், மனிதர்கட்குள்ள ஆதாரமாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை, ஆகிய இவ்வாறு ஸ்தலங்கள் அமைந்த நமது தேகத்திலேயே சகலமா தேவரும் வியாபித்திருக்க, ஆலயத்திற்குப்போவது மடமை"யென்று மறையுணராது, மதியிலாது, வாய்கூசாது கூறி விடுகின்றார்கள் அந்தோ ! இக்கயவர்கட்கு நன்ஞானமிலாது போயிற்றே ! இவர்களிருந்தென்ன ! இறந்தென்ன ! இக்குணமுடையகயவர்கட்கு நன்மோக்ஷந்தானுண்டோ ? இத்தகையோருடைய மடமையை என்னென்றியம்புவது ! அம்மம்ம ! என்மனமோ நெகிழ்ந்துருகின்றது. இக்கயவர்கள் "கலை" புணர்ந்த வித்வசபையிற் சென்று பேசவும் திறமாமோ ? சே ! இவர்கள் சுத்த கசடர்களேயல்லாது, வித்வ சிகாமணிகளென விளங்குவார்களோ ? இல்லை, இவர்கள் முற்றும் மதியற்ற கசடர்களே யாவர். இங்ஙனம், இவர்கள் கவனிக்கத்தக்கது.

"பண்டு நான்பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலேசெபித்து விட்ட மந்திரங்களெத்தனை
மிண்டனாய்த்திரிந்த போதிறைத்த நீர்களெத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள் சுற்றி வந்ததெத்தனை"

என்று ஞான நிலையையடைந்த "சிவவாக்கியரும்" ஆலயங்கள் சென்றது எத்தனையோ வென்று மேற்கண்ட "செய்யுள்" இயம்பாநின்றது. இதனால், நாமும் அம்மஹான்போல் ஞானநிலையடையும் வரை ஆலயஞ்சென்று கடவுளை வணங்கிவர வேண்டிய தவசியமாயிருக்கிறது.

அவ்விதம், "ஆலயம்" போய் கடவுளைத் தியானஞ் செய்யத் தகுதியற்ற, அதாவது, கோவிலில்லாத ஊர்களில் வசிப்பதும் தகாதென்பதைக் குறித்தே; "கோவிலில்லா ஊரில் குடியிருக்க



வேண்டாம்" என்று நமது ஔவைப் பிராட்டியாரு மியம்பி இருப்பதும் தவிர, சைவசமயாசாரிகள் நால்வர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள்,

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருக்காலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்ப்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கள் மிகநலியப்பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

என்றியம்பி இருப்பது நாம் கோயிலுக்குப் போகப்படாது என்பதற்கல்லவே. உலகவாழ்க்கையி லீடுபட்டுள்ள நம்மனோர்க்கு "கடவுளை வணங்க" பிரபஞ்ச பாசமானது முன்னின்று திரைபோல் மனதை மறைக்கின்றது. ஆகையால் நாம் நமது தேகத்திலேயே வியாபித்திருக்கும் கடவுளைத் தியானஞ் செய்ய முடியாமற் போகின்றது. ஆனதால், நாம் சதா "ஈசனை"ப்போற்ற நேரமில்லாவிடினும், ஒவ்வொரு தினமும் ஓய்வு நேரங்களில் கோயிலுக்குப் போய் ஆலயத்தில் அமைக்கப் பட்டிருக்கும் விக்கிரஹத்தை "சாக்ஷாத் சிவபெருமானே" இங்கு அமர்ந்துள்ளார் என மனதிற் தியானத்து பக்தி சிரத்தையுடன் வணங்கிவரவேண்டியது மிக்க அவசியம்.

பக்திமான்களே !

நம் மனத்தின்கண் அடைந்துள்ள அழுக்காறு நீங்கி "தூய்மை" மனத்துள்ளவர்களாக வேண்டியே கடவுளை வணங்க கோவிலுக்குப் போகின்றோம். பெரும்பாலும் நம்மவர்கள் குளிக்கப்போய் சேற்றைப்பூசிக் கொண்டு வருவதுபோல், கடவுளைவணங்கப்போய் சொல்லொணா பாதகங்களைச் செய்து மீளா நரகத்திற்கு ஆளாகின்றார்கள்.

கடவுளைத்தியானஞ் செய்யப் போகின்றவர்கட்கு அந்தஸ்து வேண்டாம், விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் வேண்டாம், சிரசில் வஸ்திரந் தரிக்கவேண்டாம், தலைவாரிப் பொட்டிட்டு வாசனைதிரவியங்களை அணிந்து கொள்ளவேண்டாம், ஏறிச்செல்ல வாகனம் வேண்டாம், தாசி முதலானவர்களுடன் செல்லவேண்டாம், பாதரக்ஷைவேண்டாம், குடைபிடித்துச் செல்லவேண்டாம், பலமனத்துடனுஞ்செல்ல வேண்டாம் என்று நமது இதிகாச புராணங்களெல்லா முறையிடுகின்றன.

இந் நீதியைக் கடந்து சிலர் தங்களைப் பலரும் பிரபுஸ்தானத்தை வகித்தவரென மதிப்பதற்கேற்ற அந்தஸ்து செய்து கொண்டும், தலைவாரிப் பொட்டிட்டுக்கொண்டும், விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து கொண்டும், சிரசில்வஸ்திரம் தரித்துக்கொண்டும், பாதரக்ஷைப்போட்டுக்கொண்டும், வண்டி, குதிரை, முதலியவாகனங்களில் ஏறிக்கொண்டும், தாசி முதலானவர்களை கூட்டிக்கொண்டும், தாம்பூலப்பெட்டி தாங்குவோராளுடனும், குடைப்பிடிக்க வோராளுடனும், இன்னும் பலவித டாம்பீகங்களைக் காட்டிக்கொண்டும், பலவிதத்திலும் மனதைச்சிதறவிட்டுக் கொண்டும், கடவுளை வணங்க கோவிலுச்குப் போகின்றார்கள்.

இது மட்டுமல்ல, இன்னும் இவர்கள் ஆலயத்திற்சென்று கடவுளை ஒருமையுடன் துதிக்கின்றார்களோ! இல்லை, ஆலயத்திலமர்ந்திருக்கும் சாக்ஷாத்சிவபெருமான் முன்னிலையில் கைகூப்பிக் கும்பிடும் சமையம் கண்களிரண்டும் அக்கம்பக்கங்களிலுள்ள மாதர்களையோ அல்லது வேறெந்த விஷயங்களிலேனும் நோக்குகின்றன. வாய் முணுமுணுவென்று ஸ்தோஸ்தரிக்கின்றன. அவர்கள் கருத்தோ அங்குள்ள குலமாதர்களையோ அல்லது விலைமாதர்களையோ, இச்சித்து அவர்கள்மேல் ஆவல்கொள்கின்றன. அவர்கள் தேகமோ பலவித ஆனந்தத்தைச் சார்கின்றன: மேலும், காதுகளிரண்டும் அக்கம்பக்கங்களில் என்ன பேசுகின்றார்களென்று கவனிக்கின்றன. இங்ஙனம், ஆடவர்கள்மட்டும் இவ்விதமிருக்கிறார்களென்பதல்ல.



பெண்கள் இதைவிட பன்மடங்கு டாம்பீகப் படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் குலமாதர்களோ! விலைமாதர்களோ! என ஐயமுற அலங்கரித்து கோவிலுக்குப் போகின்றார்கள். அவர்கள் ஆலயங்களிற்செய்யும் பாதகங்களைச்சொல்ல என்னொரு நாவுமேற்றதல்ல. இஃதை வாசகருணர்க; இப்படித்தாயமன முடையோர் பின்வரும் பாடலைக்கவனிக்க

"கையொன்று செய்யவிழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே"

என்று நம் பட்டினத்தடிகள் சொல்லியிருப்பதும் கவனியாது கோவிலுக்குப்போய் இதற்கு முற்றும்மாறாக நடந்து அடையும் பயன் யாது? இப்படித்தாய செய்கையுள்ள சகோதர சகோதரிகாள்! நீங்கள் கோவிலுக்குப் போகாமலே இருத்தல் மிகவும் நன்றெனப் புலனாகின்றன.

சகோதர சகோதரிகாள்!

யாம் கூறிய வியாசத்தை வாசிக்கும் அன்பர்கள் என்மீது சினங்கொள்ளலாம் அஃது அறிவுடையோர்ச் செய்கையன்று இங்ஙனம் யாம் கூறிய நீதியை அறிந்து அதன்படி நடக்க வேண்டிய ஓர் நல்லுபதேசமென கைக்கொள்வீர்களென கருணாநிதியாகியக் கடவுளை முப்போதும் போற்றுகின்றனன்.

ஓம் தத் ஸத்.

இப்படிக்கு,

அன்பர்க்கு நண்பன்,

**எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,**

தமிழ் நாவலன் & பப்ளீஷர் மங்கநல்லூர்.

# தற்கால வித்தையின் நிலைமை.

பொதுவாய் இக்காலத்தில் ஜனங்களுக்கு வித்தியாபிவிருத்தி அதிசயிக்கும்படியான மேன்மை ஸ்திதியிலிருப்பதாகவும் அதற்கு தக்கவாறு புத்தியும் குணமும் விசாலமாகி லோகோபகாரத்துக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாயிருந்து வருவதாகவும் பெரியோர்களின் அபிப்பிராயம். இதைச்சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

வித்தையின் ஆவசியகமும் மகிமையும் எக்காலத்திலும் மச சமயத்தாராலும் புகழ்ப்பட்டேவரப்படுகிறது வித்தையினால் புத்தி தீக்ஷிணியமாகவும் விசாலமாகவுமாகி ஆத்ம க்ஷேமத்துக்கும் பரோபகாரத்துக்கும் சாதகமாக ஏற்படுகிறதென்பதும் சர்வ சம்மதம். வித்தையின் பிரயோஜனமும் ஆத்ம ஞானம் மோக்ஷ ஸாதனம் இவைகளின் பொருட்டென்று சிலராலும் கீர்த்தியின் பொருட்டென்று சிலராலும் பணம் சம்பாதித்தலுக்கும் கௌரவமான ஜீவனோபாயதுக்கும் சாதகமாயிருக்கிறதென்று சிலராலும் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

நமது தற்கால ராஜாங்கத்து கனுகுணமான இங்கிலீஷ் கல்விப்பயிற்சிவருமுன் வித்தையின் பிரயோஜனம் ராஜாங்கத்தில் ஒரு கௌரவமான ஜீவன விருத்திக்கு காரணமாயிருந்ததாக துலங்கவில்லை. சுமார் அறுபது எழுபது வருஷங்களாக கிராமவாஸிகள் முதற்கொண்டு தங்கள்குல கிரமமாய் வந்த சம்ஸ்கிருதம் அல்லது தாங்கள் பேசும் பாஷையிலுள்ள நூல்களின் பயிற்சியை விட்டு தங்களுக்கிருக்கப்பட்ட கிஞ்சித்து சொத்தை விரயம் செய்தாகிலும் தங்கள் குழந்தைகளை இங்கிலீஷ் வித்தையில் பிரவேசிக்கும்படி விட்டதின் நோக்கம் ஏதோ சர்க்காரில் இங்கிலீஷ் வித்தையில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு அவரவர்களின் புத்திக்குத்தக்கபடி கௌரவமான விருத்திக்கும் மிகுந்த தனோபார்ஜனதுக்கும் ஆதாரமாயுள்ள ஒரு உத்தியோகம் கிடைக்கிறதென்ற நம்



பிக்கையேயொழிய வேறு ஏதேனும் காரணமிருப்பதாகத் தெரியவில்லை. இப்போது ராஜாங்கத்தாரும் அதில் பிரமுகஸ்தானத்தை வகிக்கிற நம்மவர்களும் இங்கிலீஷ் வித்தை அப்பியசிக்கவேண்டியது ஆத்மார்த்தத்தின்பொருட்டேயல்லாது ராஜாங்கத்தில் ஏதோ ஒரு ஜீவனார்த்த விருத்தி கிடைக்குமென்று அபேட்சித்து எதிர்பார்ப்பது மிகவும் மௌட்டியமானதும் இழிவானதுமான காரியமென்றும், ராஜாங்கத்தார் அந்தப்படி பொய்யான நம்பிக்கை எக்காலத்திலும் யாருக்கும் கொடுக்கவில்லையென்றும், பிரசுரம் செய்வதுபோல் முன்காலத்திலும் சொல்லி, காரியத்திலும் காண்பித்திருப்பார்களாகில் இங்கிலீஷ் அபிவிருத்தி இவ்வளவுதூரம் பரவியிருக்குமோவென்பதும் ஆத்மார்த்தம் என்ற பெயரை அடைவதற்கும், குலாசார கிரமங்களை நசிக்கச்செய்வற்கும், குடும்ப சொத்துக்களைவிற்று படிக்கப்போட்டு தெருவில் நிற்பார்களோவென்பதும் சந்தேகம். முன்காலத்தில் நம் தேசத்திலாகிலும் இதர தேசங்களிலாகிலும் ஜனங்கள் வித்தியாப்பியாஸம் செய்வதற்காக ஏராளமானதங்கள் சொத்துக்களைச் செலவு செய்தார்களென்பதாக எந்த தேச சரித்திர மூலமாயும் வெளியாகவில்லை. குடும்பத்தில் ஒரு தகப்பனுக்கு தன் பிள்ளைகளுக்கு அன்னம் போட்டு ரட்சிப்பதைவிட மேலானதாயுள்ள வித்தையை ஊட்டுவிப்பதான பெருங்கடமையிருப்பதுபோல, பொது ஜனங்களான பிரஜைகளுக்கு தகப்பன் ஸ்தானமாயுள்ள ராஜாங்கத்துக்கு ஷடி பிரஜைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கவேண்டியது முக்கிய கடமையாகும். இதற்கனுகுணமாக நமது தேசத்திலும்கூட காலதாமதத்திலாகிலும் ராஜாங்கத்தார் பாலர்களின் ஆரம்பவித்தையையாவது கட்டாயப்படுத்துவதற்கு வேண்டியமுயற்சி எடுத்துவருவதை நாம் பார்க்கலாம். புத்திஎன்பது எல்லா மனுஷியர்களிடத்திலும் எந்த நிலைமையிலும் காணக்கூடிய ஒரு அபூர்வவஸ்து. ஆனால் நீர் ஊற்று சில இடத்தில் தரை மட்டத்துக்கு வெகு சமீபத்திலும் சில இடத்தில் அசாத்தியமான ஆழத்திலும் அகப்படுவதுபோல சிலர் புத்தி, சுபாவமாகவே தீக்ஷிணியமாகவும் பிரகாசமாகவும், இன்னும் சிலருடையது மிகவும் மங்கிதுருப்பிடித்து ஜாஸ்தி உரைகல்லை அபேட்சிக்கிறதுமாய் காணப்படுகின்றன. குப்பையிலுள்ள மாணிக்கத்

தைப்போல் அதிக புத்தியுள்ளவர்களைப் பொறுக்கியெடுத்து லோக க்ஷேமத்துக்கு உபயோகப்படுத்தவேண்டியது ராஜாங்கத்துக்கு முக்கிய கடமையாகும். புத்திக்கு ஜாதிபேதமும் தேசபேதமும் கிடையாது. ஞானம் பிரும்மஸ்வரூபம். அதற்கு மேல்பட்டு பூஜிக்ககூடியதாயுள்ள வஸ்து வேறொன்றுமில்லை.

இங்கிலீஷ் வித்தை ஏற்பட்ட பிறகுதான் ஜனங்களுக்கு புத்தி விசாலமாகி உலகத்தின் நிலைமை நன்றாய்த்தெரிந்து அதன்படி நடந்துகொள்ளக்கூடிய தன்மை ஏற்படுகிறதென்றும் அதற்குமுன் காலத்தில் வித்வான்கள் என்று சொல்லப்பட்டவர்கள் கிணற்றுத் தவளைகளைப்போல் உலக விவகாரம் தெரியாமலிருந்து வந்தார்களென்று சொல்வதுண்டு.

வித்தையைப் பொதுவாய்க்கலைவித்தையென்றும் தொழில் வித்தையென்றும் பிரிக்கலாம். முற்காலத்திலும் கூட கேவலம் வேதபாராயணத்தை மட்டில் அப்பியஸித்தவர்களையும் இதர சாஸ்திரங்களின் சில பாகங்களில்மட்டில் தேர்ச்சியடைந்தவர்களை வித்வான்களென்றும் அழைக்கப்பட்டதாகக்காணோம். சாங்கோபாங்கமாக வேதத்தை கற்றவர்களுக்கு மட்டுமே பூர்ண யோக்கியதையும் மரியாதையுமுண்டு. ஷை சாங்கோபாங்கத்தில் அகப்படாத சாஸ்திர மொன்றுமில்லை. இதில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு எந்த பாஷையிலுள்ள எவ்வித சாஸ்திரத்தையும் ஜடிதியில் அறிந்து கொள்வது சுலபமான காரியம். தொழிலுக்குரித்தான வித்தைக்கு தொழிலில் அப்பியாஸமே முக்கிய சாதனமாகையால் கலை வித்தையில் பரிசிரமம் எடுத்துக்கொள்ளவேண்டியது அனாவசியமாய் விடுகிறது. இதை உத்தேசித்தே இக்காலத்திலும் வைத்தியம் இஞ்சினியரிங் முதலிய இலாகாக்களில் கலை வித்தையின் தேர்ச்சியை அதிகமாய் அபேட்சிக்கிறதில்லை.

(தொடரும்)

வி. பாலசுப்பிரமணிய சாஸ்திரியள்,
எம். ஏ. எம். எல்.

# ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

நம் தாய்நாடான இப்பாரதகண்டத்து நடுநாயகமென விளங்கும் வங்கநாடு மற்ற பாகங்களைவிட பலவிஷயங்களில் பெருமைவாய்ந்தது. நீர்வளம், நிலவளம் வாய்ந்து பல பெரிய மாஹான்களைப் பெற்ற நாடே இவ்வங்கநாடு. ஆதியில் 56 தேசங்களிருந்தனவென்று புராண இதிகாசங்கள் கூறுவதில் கொஞ்சம் சந்தேகப்படும் சந்தேகிகள் சென்ற 200 வருஷங்களாக இந்திய தேசசரித்திரத்தைப்படிப்பார்களாயின் இந்தியா பெருமையடைந்ததற்கும் இனிப் பெருமையடைவதற்கும் காரணமாக விருப்பது இவ்வங்கநாடே என்று உள்ளங்கை நெல்லிக்கனிப்போல் அறிவார்.

நமது இந்தியா தேசத்தில் உண்டான பலபெரிய இயக்கங்களுக்குக்காரணமாயிருந்தது அவ்வங்கநாடே. பலபெரிய தேச சரித்திராசிரியர்கள், மதாசாரிகள், கவிவாணர்கள், வசனமாரி பொழியும் உபன்யாஸிகள், ஜடதத்துவ சாஸ்திரிகள், ரஸாயன சாஸ்திரவிற்பன்னர்கள், சட்டநிபுணர்கள், பத்திரிகாசிரியர்கள், தேசபக்தர்கள் நிறைந்தது இவ்வங்கநாடே.

இந்த நிகரற்ற நாட்டிலே ஒரு புராதன க்ஷத்திரிய குடியில் தகுந்த அந்தஸ்துள்ள குடும்பத்தில் நமது தேசபந்து ஸ்ரீயுத சித்தரஞ்சனதாஸர் உற்பவித்தார். பல்லாயிர வருஷங்களாக இந்தியா பொதுவாயும், வங்கநாடு முக்கியமாயும் பற்பல அரசாக்ஷிகளாலும் படையெடுப்புகளாலும் க்ஷீணமடையக் காரணமுண்டெனினும், நமது தாஸர் குடும்பம் க்ஷத்திரியர்களுக்குரிய தைரியமும் தர்மமும் குறையாது தங்கள் பேரோங்கி வளரும்படி இருந்து வந்திருக்கிறது. இக்குடும்பத்திலுள்ளோர் பலர் இதற்குமுன் அரிய குணங்கொண்டு மெச்சப்படுங்காரியங்கள் செய்தனராயினும், ஸ்ரீயுத சித்தரஞ்சனதாஸர் தமது அரிய குணத்தாலும், கல்விச் சிறப்பாலும், தானதர்மத்தாலும், தனக்குவமையற்ற பேரும்

அடைந்து தன் வம்சத்தில் இதுவரையிருந்த பல்லோர்களுக்கும் யெசஸ் பரிமளிக்குமாறு நடந்து வந்திருக்கிறார். இம்மஹானின் அரிய சரித்திரத்தையும் இவருக்கு வாய்ந்த உத்தமோத்தமபத்தினியின் பெருமையும் போதுமானபடி எழுதவல்லார் யாருமில்லையெனவறிந்தும் அவரது நாமமே ஓர் பலமாகவும் அவர்மீதுள்ள பக்தியே தைரியமாகவும் அடைந்து இவர் தம் சரித்திரத்தை எழுதத் துணிந்தோம்.

இக்குடும்பம் ஆதியில் விக்கிரமபுரிஎன்ற ஒரு பெயர்பெற்ற பிரதேசத்தைச் சேர்ந்தது. இவ்விக்கிரமபுரிதான் ஆதியில் பௌத்தமதம் பலநாடுகளில் அறியப் பட்டு அதன் கோட்பாடுகளின் மேல் அதிசயமடைந்து சீனதேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த ஹியாந்த்ஸ் வாங்குக்கு உபதேசஞ் செய்த பிராமண அரசர் ஸிலாவர்த்தர் பிறந்த இடம். கடவுள் இருப்பது பொய்யென்றும் அவ்வாறொருவர் உண்டெனக்கருதினாலும் துன்பம் கொண்ட இவ்வுலகத்துக்கும் அவருக்கும் சம்மந்தமில்லையென வாதித்த பேர் போன ஸ்ரீ ஞானர் பிறந்த இடமும் இதுவே. சென்ற நூறு வருஷங்களுக்கு முன்னர் பிரம்ஹ ஸமாஜத்துக்கு பாடுபட்ட பலர் பிறந்ததும் இவ்விடமே. இவ்விடந்தான் ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸரின் பூர்வீக நாடு.

இவரது குடும்பத்தின் முக்கிய குணம் ஈகை என்பதே. இவரது முப்பாட்டன் பாபு ரத்ன கிருஷ்ணதாஸர் தனது ஈகையாலும் இரக்ககுணத்தாலும் வெகுபேர் பெற்றவர். இவரது மூத்தகுமாரரும் சித்தரஞ்சனரின் பாட்டனருமான ஜகத்பந்து தாஸரோ ராஜ ஷாஹி என்ற இடத்து சர்க்கார் வக்கீலாக உத்தியோகம் செய்தவர் ஏராளமாக பணம் சம்பாதித்தவர். சம்பாதித்த பணமெல்லாம் தமது ஏழைபந்துகளுக்காக அர்ப்பணம் செய்தவர். விக்ரமபுரி கர்ணனென்று யாவராலும் கொண்டாடப்பட்டவர். இவரது ஈகையைப்பற்றி அனேக கதைகள் இன்னும் பரவுகின்றன.

இவர் அதிதிகள் வந்து தங்கி உண்ண ஒருபெரிய விடுதி விக்ரமபுரியில் கட்டி, வரும் அதிதிகளுக்கெல்லாம் அன்போடு



உபசாரம் செய்யுமாறு பல சிப்பந்திகளை நியமித்தார். ஒருக்கால் இவர்களது வேலை எவ்விதமிருப்பது என்று பார்க்க எண்ணங் கொண்டு ஓரிரவு அவ்விக்கிரமபுரிக்குசென்று ஒரு ஆள்மூலம் விடுதியதிகாரியிடம் இறங்க இடமும் உண்ண அன்னமும் வழிப் போக்கனை தனக்கு வேண்டுமென்று கேட்டனுப்பினார். நாள் முழுதும் வந்த அதிதிகளுக்கு வந்தனோபசாரமெல்லாம் செய்து இளைத்துப்போய் உறங்க ஆரம்பிக்கும்போது இவ்வேண்டுகோள் வரவே, விடுதியதிகாரியும் காலமாயிற்று என்றார். வந்துவிட்டது கோபம். அதிகாரியை வெகுவாய் கோபித்து அவனது கடமையைப்பற்றி கூறி அவன் அவ்வாறு மறுபடியும் செய்யாதவிதமாய் கற்பித்தார்- இவர் ஒருகல்விமான். செய்யுள்கள் செய்யவல்லார். அவரதுபாட்டுக்கள் இன்னும் வங்கதேசத்தில் பாடப்பட்டுவருகின்றன. இவரது உபசாரணை, பரோபகாரகுணம், கவனசக்தி முதலிய குணங்களெல்லாம் சித்தரஞ்சன தாஸரிடம் வாய்ந்துள்ளன.

தாஸர் வம்சத்தார்கள் க்ஷத்திரிய வம்சத்தவர்களென்றும் அரசுரிமை வாய்திருந்தவர்களென்றும் முன்பேகூறினோம். அரசுரிமை இப்பன்னூற்றாண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்களால் ஒடுங்கியபின், இக்குடும்பத்தார் வாணிகத்துறையில் இறங்கி கண்ணியமான ஜீவனம் செய்து வந்தார்கள். தாஸரவர்களின் குடும்பத்தார்களில் பலர் கவர்ண்மெண்டு உயர்ந்த உத்தியோகங்களிலுமமர்ந்திருக்கின்றனர்.

இவர் குமாரரும் சித்திரஞ்சனரின் தகப்பனருமான பூபன் மோஹனதாஸர் கல்வியிற்சிறந்தவர். ஆங்கிலேயக்கல்வியும் நன்றுயடைந்தவர். வைக்கீல் உத்தியோகமமர்ந்தவர். அவ்வுத்யோகத்தில் நல்ல கீர்த்தியுடன் நற்பேர் வாங்கியவர். கல்கத்தா ஹைகோர்ட்டில் பூபன் தாஸரிடம் போனால் கேஸ் கட்டாயம் வெற்றியடையும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு கக்ஷிக்காரருக்கும் ஏற்பட்டிருந்தது. தனது வாதத்தை லகுவில் விடமாட்டார். நியாயஸ்தலத்தில் இருக்கும் இதர வக்கீல்களும் இவர் கேஸில் வாதாடுவதைப்பார்த்து கேட்க திரண்டு இருப்பார்கள். இவரது மனது

மிகவும் இளகினது. வரையிலாவது கொடுக்கும் வள்ளலென விளங்கினார். பசி, மிடி எனும் பிணியுடன் வந்தவர் யாவர்க்கும் அருமருந்தென விளங்கினார். கொடுப்பதாய் வாக்களித்து விட்டால் எப்படியாவது கடன் வாங்கியாவது உதவியே தீர்வார்.

இவர் பல வருஷங்களாக வங்காளத்திலுள்ள பத்திரிகைகளுக்கு சமாசாரம் எழுதிவருவார். இவர் எழுதியுள்ள வியாஸங்களைப் புகழாதார் இல்லை. கொஞ்சகாலம் பிறகு இவர் பத்திரிகாசிரியராக இருக்கவேணுமென்ற எண்ணம் உதித்தது. இவர் பிரம்மஸமாஜத்தை பின் பற்றியவர். ராஜா ராமமோஹனராய், கேசவ சந்திர ஸேன் இவர்களிடத்தில் அத்யந்த மரியாதை வைத்தவர். இவர்களது சமயத்தைக் கைக்கொண்டவர். ஆதலால் அச்சமயத்தை அனுசரித்த "பிராமோ பப்ளிக் ஒப்பினியன்" (Brahmo Public Opinion) என்னும் பத்திரிகாசிரியராய் இருந்தார். இப்பத்திரிகை மூலம் தனது சமய கோட்பாட்டை பரவச்செய்தார். பலர்களது துர்ஆசாரங்களை கண்டனம் செய்தார். விக்கிரக ஆராதனையைப் பற்றி பல கண்டனவியாஸங்கள் எழுதினார். மதமென்றும், சாஸ்திரம் என்றும் சம்ப்ரதாயம்என்றும், பேரைவைத்து நடத்திவரும், அட்டூழியங்களையும் வீண் பணச்செலவையும் ஒழிக்க ஆரம்பித்தார். பலி முதலியவை அனாகரீககாலத்தில் ஏற்பட்டுள்ளவையென்றும், சாஸ்திர சம்மதமற்றதென்றும், காட்டினார். தான் எழுதுவது பலருக்கும் உவகையளிக்குமோ அல்லது வெறுப்புண்டாக்குமோ என்று யோஜியார். தான் இது ஸரியென்று மனமாற அறிந்தாராயின் அதை எடுத்தே கூறுவர். தான் இது பிசகு என்று மனமாறத் தெரிந்தாராயின் அதை கடுமையாய்க்கண்டிப்பார். இவ்வாறு செய்வதில் அவருக்குப் பிடிவாதமும் உண்டு. இவ்வாறு வியாஸங்களை எழுதி பாமரஜனங்களைப் போதித்துவந்தார்.

"பெங்கால் பப்ளிக் ஒப்பினியன்" (Bengal, Public Opinion) என்னும் பெயர்புனைந்த பத்திரிகை ஆசிரியராயிருந்த போது பத்திரிகை நடத்துவதிலும் வியாஸங்கள் எழுதுவதிலும் மிகுந்த ஸாமார்த்தியசாலியென்று இவரை அக்காலத்து இதர பத்திரிகாசிரியர்களுள் கொண்டாடாதார் இல்லை.



இவர் ஸம்பாதித்த சொத்தெல்லாம் ஈகையிலேயே செலவிட்டார். தன் குடும்பத்தையும் வம்சத்தையும் சேர்ந்தவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேணுமென்ற எண்ணம் இவருக்குண்டு. ஏழைப்பிள்ளைகளுக்கு வித்தைக்குரிய செலவும் சம்பளமும் தானே கொடுத்துதவினார். "வருவாயுட் கால் வழங்கிவாழ்தல்" என்னும் அளவுக்குமேலே இவர் வருவாயை முழுவதும் வழங்கியே வாழ்ந்தார். பணம் முடையான காலத்தும் தன் செலவைச் சுருக்கமாட்டார். கடன்வாங்கியாவது செலவுசெய்தும் தர்மம் செய்தும் வருவார். இவ்வாறு பணத்தைப்பார்க்காமல் கண்டவர்களுக்குச் கண்டபடி செலவு செய்ததால் இவருக்கு கடன் அதிகரித்து. கடன் அதிகரிக்கவே, கடன்காரர்கள் நெருக்க ஆரம்பித்தார்கள். தான் நல்லஸ்திதியில் இருந்து தருமம்செய்து வந்தகாலத்தில் தன்னைச்சூழ்ந்திருந்த அனைவரும் "அற்ற குளத்தின் அறு நீர்ப்பறவை போல்" அண்டவில்லை, ஸரியான படிப்பினையைக்கொண்டார். கடன்தீர்க்க மார்க்கமில்லாமலும் கடன்காரர்கள் நெருக்கிச்செய்த நடவடிக்கைகளாலும் இன்ஸால்வெண்டு மனுகொடுத்தார்.

மனிதன் வாழ்வில் என்ன அறிகிறான்? "காலாடுபோழ்தில் கடுகிளைஞர்யாவரும் வானத்து மேலாடு மீனிற் பலராவர்" என்று உணர்கிறான். இவ்வாறாகிய நிலைமைக்கு இவர் வந்தாரேயென்று பலர் அனுதாபம் காட்டினார், தர்மம் தலைகாக்குமென்பது பொய்த்ததோஎன்று பலர் எண்ணினார் இக்குடும்பத்தின் நிலைமை தன்னாலன்றோ இவ்விழிமைக்கு உட்பட்டது என்று பூபன் மோஹனதாஸர் எண்ணி ஏங்குவார். தன் குடும்பத்துக் கஷ்டத்தை நினைத்து நினைத்து மனமுருகுவார். இம்மனோவியாதியின் காரணத்தால் அன்னாகாரம் குறைய, தேகம் வலிமையிழக்க, நோயுமடைந்தார். கடாசியாக வியாதி அதிகரித்து இவரது மனைவி மக்கள் குழாம் நடுவில் இருந்து, அவர் துயர்க்கடலின் ஏக இவர் விண்ணாடடைந்தனர். குடும்பம் பாரியானது. நான்குபிள்ளைகளும் ஓர் பெண்மணியும் உண்டு. அவ்வைவரும் நற்கல்வியடைந்தவர்களே. அப்பெண்மணியின் குயிலொத்த ஓசையும் இணையற்ற கீதமும் சேர்ந்த பாட்டை 1917ம் வருஷம் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகாஸபை கல்குத்தாவில் நடைபெற்றபோது கூடியிருந்த ஒவ்வொரு டெலி

கேட்டும் தம்மாயுள்பரியந்தம் மறக்கமாட்டார் என்பது நிச்சயம். இந்நான்கு சகோதரர்களும் உயர்ந்த பதவிகளிலேயே இருந்து வருகிறார்கள். "மகன் தந்தைக்காற்று நன்றியிவன்றந்தை யென்னோற்றான் கொலெனுஞ்சொல்" என்ற திருவள்ளுவர் கூறியபடி இச்சித்தாஞ்சனதாஸரை மகனாகப்பெற எத்தவம் பூபன் மோஹனதாஸர் புரிந்தாரோ! அன்னாரை சகோதரராயுடைய இவர் சகோதர சகோதரி எப்புண்ணியம் செய்தனர்களோ!

(தொடரும்)

ஒரு தமிழன்.

## "பைந்தமிழ்"

### விநோத குறிப்புகள்.

புதிதாக கலியாணஞ்செய்துகொண்ட ஒருவளை, அவளது,

தோழி :—"ஏண்டி! ஒனக்கு முன்னபோல ஒங்க ஆத்துக்காரர் பூகொண்டு கொடுக்கிறது உண்டோ?" என்று கேட்டாள்.

அதற்கவள் :—"ஊம். கொடுக்கிறது உண்டே. ஏன். நேத்திக்குகூட ஒரு வாழப்பூ கொண்டு கொடுத்தார்" என்றாள்.

*  *  *  *

உபாத்தியாயர் (கிட்டுவைப் பார்த்து) :—"கிட்டு, உன் தகப்பனார் ஒருவேலையை 5 நாட்களில் செய்துமுடிப்பார். அதே வேலையை உன்சிறிய தகப்பனார் 8-நாட்களில் செய்து முடிப்பார். அந்தவேலையை இரண்டுபேரும் சேர்ந்து செய்தால் எத்தனைநாட்களில் முடிப்பார்கள்?" என்றுகேட்டார்.

கிட்டு :—"சார், ரெண்டுபேரும் சேந்தாக்க வம்பளந்து பொழுதைபோக்கி வேலையை செய்யமாட்டார்கள் சார்." என்றான்.



நீதிஸ்தலத்தில் வியாஜ்யக்காரரை அவரது வக்கீல் நோக்கி, "ஏன் ஐயா, உமக்குச் சொந்தமாயும், வியாஜ்யத்திலிருக்கின்றதுமான நிலம் எவ்வளவு நிகளம்" என்று கேட்டார். அதற்கு,

வியாஜ்யக்காரர் :—"சாமி! எங்க வீட்டிலே பக்கத்திலே உள்ள பாழுங்கிணத்துலேருந்து குட்டிச்சுவர்வரையிலே நீளங்க" என்றார்.

வக்கீல் :—"ஓய். அதைக் கோர்ட்டுலே காட்டுமய்யா?"

அவர் :—"கோர்ட்டுலேயா. வந்து ஜட்ஜ்தான் பாழுங்கிணறு என்றால் வக்கீல்தான் குட்டிச்சுவர்" என்றார்.

*  *  *  *

உபாத்தியாயர் :—(ஒருபையனைப்பார்த்து) "அடே பையா ஒவ்வொருவனுக்கும் 50 மாம்பழம் 20 வாழைப்பழம் வீதம் கொடுத்தால் எல்லோருக்கும் என்னவரும்?"

பையன் :—"வயிற்றுவலி வருஞ்சார்." என்றான்

*  *  *  *

ஒருபள்ளிக்கூடத்தில் இன்ஸ்பெக்டர் வந்தார். அவர் ஒரு பையனை நோக்கி, அடே, சின்னபையா! நான் கடைக்குபோய் 1 அணாவுக்கு வெல்லமும், 2 அணாவிற்கு கோதுமையும், $\frac{1}{4}$ அணாவிற்கு முந்திரிபருப்பும், 4 அணாவிற்கு நெய்யும், $\frac{1}{2}$ அணாவிற்கு திராக்ஷைப்பழமும் வாங்கினால், எல்லாம் சேர்த்து என்னவாகும்" என்றுகேட்டார்.

பையன் :—(தயங்காது, சடுதியில்) "ஒரு அல்வா ஆகும் மாஸ்டர்" என்றான்.

(தொடரும்)

ச. ப.

# ஓர் அதிசயக்கணக்கு.

நேயர்களே! கீழ்க்கண்டிருக்கும் கட்டத்தில் 12 கட்டங்கள் (சிறியவை) அடங்கியுள்ளன. அவைகளில் கீழ்க்கூறியபடி எண்களைப் போட்டால் நாம் வரைந்தபடி வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கட்டம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அங்கம். 1. | அ | ஆ | இ | ஈ |
| ,, 2. | உ | ஊ | எ | ஏ |
| ,, 3. | ஐ | ஒ | ஓ | ஔ |

இவைகளில் அங்கம் 1, 2ல்

(1) அ + ஊ (இரண்டையும் கூட்டினால் ஆ + உவிற்குச்சமானமாகவும், அம்மாதிரியே,

ஆ + ஏ = ஊ + இ, இ + ஏ = எ + ஈ.

(2) அ + உ + ஊ = ஆ + இ + எ, ஆ + ஊ + எ = இ + ஈ + ஏ

(3) உ + அ + ஆ = இரட்டிப்பு உ + அ + ஆ = ஊ + எ + இ.

(4) ஊ + ஆ + அ —ல் ஒன்று கழிந்தால் அஃது உ + அ + ஆவிற்குச்சமானம்

இம்மாதிரியே அங்கம் 2, 3லும்.

அ முதல் ஔவரையிலுள்ள தொகையைக் கூட்டினால் வருகிற தொகை மொத்தம் 78.

இந்தக்கணக்கில் மற்றொன்று.

அதாவது அ + ஈ + உ + ஏ = ஆ + இ + ஊ + எக்குச் சமானம். இதை தெளிவான விடையுடன் கட்டத்திலிருக்கவேண்டிய எண்களையும் நமது "பைந்தமிழ்" மூலமாய் வெளியிடவும்.

குறிப்பு:—ஒருகட்டத்திற்கும் அதற்கடுத்த கட்டத்திற்கும் உள்ள எண்களுக்கு வித்தியாசம் ஒன்று,

ச. பஞ்சாபகேச அய்யர்,
காரியதர்சி
"சச்சிதானந்த நிலையம்"
கச்சேரிரோட், மாயவரம்.

# சுபமஸ்து.

'பைந்தமிழ்' பிறக்கு மிச்சஞ்சிகையில் தமிழ் நாட்டின் ஓர் திலகமாக விளங்கி, தமிழ் பாஷையின் அபிவிருத்தியில் அபிமானம் பூண்டும் நம் பைந்தமிழ்ப் போஷகருள் ஒருவருமான ஸ்ரீமான் ஸர். எம். ஸி. டி. முத்தையா செட்டியார், (Kt., M. L. C.) அவர்களின் உருவப்படத்துடன் அவரது ஜீவியசரித்திரச் சுருக்கத்தை எமக்குத் தெரிந்தவரை வரைந்துளோம்.

தென் இந்தியாவில் பலவகைத் தர்மங்களும் பல ஆலயங்கள் குளங்கள் திருப்பணிவேலைகளும் செய்தும், சத்திரங்கள், மடங்கள், பாடசாலைகள் ஸ்தாபனம் செய்துவரும் ஒரு நகரத்தார் குடும்பத்து ஸ்ரீமான் சிதம்பரஞ்செட்டியார் அவர்களின் ஜேஷ்டபுத்திரர் இவர். இவர் வம்சத்துப் பெருமையான தர்மத்தையே கைப்பிடித்துப் புகழ்கொண்டிருக்கிறார். நகரத்தார் இருப்பிடமான ராமனாதபுரம் ஜில்லா கானாடு காத்தானில் 1887ஆம் வருஷம் பிறந்து சிதம்பரம் பச்சையப்பன் உயர்தரப்பள்ளிக்கூடத்திலும், பிறகு புதுக்கோட்டை சமஸ்தானக்கலாசாலையிலும் கல்வி பயின்றனர். கொடுக்கல் வாங்கல் தொழிலுக்குவேண்டிய பயிற்சியை தமது தந்தையினிடமே பயின்றவர். இவர் பிதா சென்னை இந்தியன் பாங்கியின்ஸ்தாபகர்களில் ஒருவராயிருந்ததால் இவர் அதேபாங்கியில் சிலகாலம் இருந்து நவீன நாணய வர்த்தகத் தொழிலையுங் கற்றுக்கொண்டார். பிறகு அப்பாங்கியின் டைரெக்டராகிய பதவி வகித்து அதை நிர்வாகஞ் செய்துவருகிறார். இந்திய தேச சம்மந்தமான பதார்த்த பொருள் சாஸ்திர (Economics) விஷயத்தில் டாக்டர் கில்பர்ட்டு ஸ்லேட்டர் (Doctor Gilbert Slater.) என்ற நிபுணரிடம் விசேஷமாக அறிந்து கொண்டவர். பல பொதுச்சங்கங்களிலும் காரிய விசாரணைக் கமிட்டிகளிலும் கௌரவ உத்தியோகங்களை வகித்து ஊக்கத்துடன் பார்த்துவருகின்றார். தென் இந்திய சேம்பர் ஆப் காமெர்ஸ் (Chamber of Commerce) என்ற பெரிய வியாபாரச்சங்கத்தின் அக்கிராசனாதிபர், சென்னை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு சங்கத்துத்தலைவர். நாட்டுக்

கோட்டை நகரத்தார் சங்கத்தின் கௌரவ காரியதரிசி. சென்னை கவர்மெண்ட் வியாபாரக் கல்விச்சாலையின் விஷயாலோசனை கம்மிட்டியில் இவரும் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டவர். பச்சையப்பன் தர்மபரிபாலன டிரஸ்டி சபையில் ஒரு அங்கத்தினர். சென்னை காஸ்மாபாலிட்டன்கிளப் என்ற உல்லாச உயர்தரச் சங்கத்தில் கௌரவ காரியதரிசி. 1921, 1922, வருஷங்களில் தொடர்ச்சியாக இந்நகரத் தலைமைக்குரிய ஷெரிப் (Sheriff) என்னும் பதவியை வகித்தவர். நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னரின் சிறிய தகப்பனாராகிய கானாட்டுக்கோமகரும், நமது வேல்ஸ் இளவரசரும் இச்சென்னைக்கு விஜயஞ் செய்த காலங்களில் சென்னை மாகாண வரவேற்பு சங்கங்களில் இவர் காரியதரிசியாக விருந்து சென்னை மாகாணத்து வரவேற்பு பத்திரிகைகளை அக்கோமக்களிடம் கொடுத்த அரிய கௌரவத்தைப் பெற்றவர். சென்னை நகர பரிபாலனசபையிலும் துறைமுக நிர்வாக சபையிலும் மாகாண சட்ட சபையிலும் இவர் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றவர். இவர் செய்திருக்கிற தர்மங்களையும் நன்கொடைகளையும் சிறிது சொல்வோம். சென்னை விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரி நிதிக்கும் டபரின் சீமாட்டி நிதிக்கும் நன்கொடை யளித்தார். சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் க்ஷயரோக சிகிச்சை சாலை (Tuberculosis Institute) ஸ்தாபனம் செய்ய ரூ 50000 கொடுத்தனர். யுத்த சம்மந்தமாயும் இவர் கொடுத்ததுகை வெகு அதிகமானது. பாம்பரையாகவுள்ள மததர்மங்களைக் கைக்கொண்டொழுகுவதுமன்றி மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு இவர் குடும்பம் பேருதவி செய்திருக்கிறது. சென்ற 1911ஆம் வருஷம் நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேக காலத்தில் இவர் நேரே இங்கிலாந்து சென்று அம்மஹோத்ஸவத்தை பார்வையிட்டு பிறகு ஐரோப்பாக்கண்டத்தின் முக்கிய நகரங்களையும் பார்த்து வந்தனர். கவர்மெண்டார் ராவ்சாகிப்பட்டத்தை முதலில் இவருக்குக்கொடுத்தார்கள். பிறகு சென்றவருஷம் 'ஸர்' என்ற உன்னத பதவியையும் பட்டத்தையும் இவருக்கு அளித்தார்கள். இறைவன் இவருக்கும் இவர் குடும்பத்தாருக்கும் நீண்ட ஆயுளையும் பெருத்த ஐசுவரியத்தையும் உயர்தரப் பதவிகளையும் தந்தருள்வாராக.

# ஸ்த்ரீகளுக்கான பக்கம்.

ஒரு மாது எழுதியது

என் அருமை சகோதரிகாள்,

நான் இந்த தலைப்பின் கீழ் உங்களுக்கு சிற்சில விஷயங்களைப் பற்றி தொடர்ச்சியாய் எழுத உத்தேசித்திருக்கிறேன். அவைகளில் உள்ள விஷயங்கள் நம் போன்ற பெண்பாலர்கள் மட்டும் இல்லாது புருஷர்களும் படித்து அவைகளின் குற்றங்களை நீக்கி குணங்களை ஏற்றுக்கொள்ளும்படி முதலில் வற்புறுத்துகிறேன்.

இப்போது நான் எழுதப்புகும் சமாசாரம் பெண்களின் மாக்ஷிமை என்பதே. அதில் ஆடவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்களும் உண்டு. ஓர் பெண் இளம்பருவத்தில் பெற்ற தாய் தந்தை வசமாகவே யிருப்பதாலும் எல்லாத்தாய்தந்தைகளும் தங்கள் குழந்தைகளின் நன்மையை நாடுபவர்களாயு மிருப்பதாலும் அப்பருவத்தை நான் விரிவாய்க்கூறாது அப்பருவத்தில் குழந்தையைப்பழக்கி வளர்க்கும் கடமையை பெற்ற தாய் தந்தைமார்க்கே விட்டு விட்டேன்.

ஆயினும் ஒன்றுமட்டும் அத்தாய்தந்தையர்களுக்கு நியாபக மூட்டுவேன். அவர்கள் பழக்கம் செய்வதுதான் பெண்குழந்தைக்கு ஆயிசுபரியந்தம் பழக்கமாய்விடும். "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்று பெரியவர்கள் கூறியுமிருக்கிறார்கள். ஆதலால் தாய் தந்தையர்கள் குழந்தைகளை நன்குபோற்றி வளர்த்து அக்குழந்தைகளிடத்தில் அன்பும் ஆதரவுமா யிருத்தல் வேண்டும். "ஐயோ! இக்குழந்தைகளை பெற்று வளர்த்து வருவதுதான் நமது கடமையாகும். கலியாணம் செய்து மற்றொருவர் வீட்டில் அனுப்பினால் இக்குழந்தையின் பழக்கம், காரியம் முதலியவைகளைப்பற்றி ஏனையோர் குற்றம்பாராட்டக்கூடாத நிலைமையில் இக்குழந்தை நடந்து கொள்ளுமாறு நாம் செய்யவேண்டுமே. புருடன் வீட்டை

நன்றாயும் சுத்தமாயும் வைத்துக்கொள்ள வேணுமே. நல்ல பிள்ளையாய் நடந்து சினம் காட்டாது, துர்நகை கொள்ளாது, எதிர்த்துப் பேசாது, காரியம் கவனியாது வீண்பொழுது போக்காமல் நல்ல பெயர் அடையவேணுமே, ஒரு குற்றம் குழந்தையிடம் கண்டால் 'அப்பன் குணம், ஆயின் குணம்' என்று புகுந்த இடத்தில் சொல்லி நிந்தைக்கிடமாகாமல் இருக்கவேணுமே.'' இவைபோன்ற எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு வளர்க்கவேணும்.

பிறகு தாய் தந்தையர்கள் பற்பலவான்களை நாடிச்சென்று யுக்தமாகத்தோன்றும் ஒருவரை நிச்சயித்து பாணிக்கிரணம் செய்து வைக்கவேணும். இது சம்மந்தமாய், இக்காலத்தில் சம்பவிக்கக்கூடிய ஒரு விஷயத்தைப்பற்றி நன்கு கூறுதல் அவசியமாகும். பணத்தை எதிர்பார்த்தும், தங்கள் லாபத்தைக்கருதியும் இன்னும் மற்ற உறவினர்களின் எண்ணத்தை உத்தேசித்தும் அறுபது வயதுள்ள கிழவனுக்கு பால்யம் வகித்த பெண்ணை கலியாணம் செய்து அப்பெண்மணியின் ஆயுளை வீணாய்ச்செய்யும் பாதகத்திலிருந்து தப்பவேணும். குலப்பொருத்தம், விவேகப் பொருத்தம், மனப் பொருத்தம், இலக்ஷணப் பொருத்தம் பிராயப் பொருத்தம், தரப் பொருத்தம் ராசிப் பொருத்தம் ஆகிய இவ்வளவு பொருத்தங்களையும் பார்த்து தனது பெண்ணுக்கு கலியாணம் செய்யும் தகப்பனே அப்பெண்ணுக்குத் தகப்பனாவான். அன்றேல் அப்பெண்ணுக்கு அவன் அந்தகன் ஆவான்.

மேலேசொன்னபடி தகப்பன் தன்பெண்ணின் விஷயமாய் செய்யவேண்டிய கடமையை முடித்த பிறகுதான் அப்பெண் நடந்து கொள்ள வேண்டிய பெரிய கடமையை எப்போதும் சிந்திக்க இடமாகும்.

சகோதரியே, இனிமேல்தான் உன் புத்தியை சோதிக்கும் காலமும் உனது அறிவின் பிரயோஜனத்தைப் பரீக்ஷிக்கும் காலமும் அணுகியது. கடமை என்பது என்னவென்று நீயறிந்தாய் என்று மற்றோர் அறிய இடமுண்டாகிறது. ஆதலால், கண்மணி, ஜாக்கிரதையாயிருக்கும் காலம் வந்தது.



கலியாண காலத்தில் சர்வஜன சாக்ஷியாயும் அக்னி முதலிய தேவர்கள் முன்னிலையிலும் முன்னறி தெய்வங்களான அன்னைபிதா பக்கத்திலும், நீ கைக்கொண்ட விரதத்தை எண்ணுவாய். நீயும் உன்பதியும் உடலும் உயிரும்போல மாறாத அன்புடன் எப்போதும் ஒத்துவாழ்வோம் என்று சொன்ன சத்தியத்தை காப்பாற்றுவாய். அவ்வாறு 'அவ்வுடன்படிக்கைப்படி நடந்து கொள்ளாமலும் அடிக்கடி பூனையும் எலியும்போல சண்டை செய்து கொண்டாலும் கற்புத்தவறி நடந்தாலும் பெரும்பாதகமன்றோ?

ஒரு சிறு விஷயம் கூறுகின்றேன். ஒருகாலத்தில் அழகு வாய்ந்த ஆடவனும் எழிலடைந்த பெண்மணியும் கிரகஸ்தாச்ரமம் நடத்தி வந்தபோது அவ்வாடவனை ஒரு விலைமாது, தனது மாய வலைக்குள்ளகப்படுத்த எத்தனித்தாளாம். அவன் அப்போது,

''நகைகுலுக்கிய முகமினுக்கிய நகைநகைத்திடு மாதரை.
நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய்
காணுமே''

என்ற ஆன்றோர் கவியை நினைத்து அவ்வேசியிடம்

''இந்தவுடலுள மைம்பொறி யின்னுயிர்யாவு மணஞ்செயும்
அந்த நன்னாளிலென்னில்லவட்கன் பொடளித்தனன்
யான் பொதுப்
பைந்தொடியே புனைச்சேர்ந்திடப் பாரிலெனக்குடல்வேறிலை
சிந்தை புலன்களும் வேறிலை சீவனும் வேறிலை செல்வையே''

யெனச்சொன்னானாம். இவ்விதமன்றோ புருஷன் குணமிருக்க வேணும். இவனன்றோ கற்புடையப்பெண்ணை மணந்து இல்லறம் நடாத்துவதற்கு யோக்யதையுடையவன். அல்லேல் இவன் மிருகத்துக்கும் கேவலமானவன். இவ்வாறு உத்தரம் சொன்னவன்தான் ஒரு புருஷன் தன் பத்னிக்கு செய்யவேண்டிய கடமையை செய்தவனாவான். அதேவிதமாக பெண்மணியும் தன் கணவன் வசம் நடந்துகொள்ளும் கடமையுண்டு. இதைவிளக்க ஒரு சிறு கதையும் கூறுவேன்.

ஒருவன் ஒரு கடையில் மாட்டியிருந்த ஓவியத்தைப் பார்க்க வரும்படி தன் இல்லாளைக் கூப்பிட்டான். அந்நங்கையுடனே தன் கணவனை நோக்கி "அச்சித்திரம் புருஷனுடையதாயிருந்தால் நான் அதைபார்க்கமாட்டேன். அது பெண்வடிவமாயிருந்தால் உம்மை பார்க்கவிடமாட்டேன்" என்று கூறினாள். இதை விளக்குமாறுள்ள பாடலாவது:—

ஓவியர்கீள் சுவரெழுது மோவியத்தின் தக்கண்ணுறுவான்
தேவியையா மழைத்திடவாண் சித்திரமேல் நான்பாரேன்
பாவையர்தம் முருவெனில்நீர் பார்க்கமனம்பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்

இவளே புருஷனிடம் செய்யும் கடமையைச் செய்யும் உத்தமியாவள்.

(தொடரும்)

---



# "பைந்தமிழ்" பஞ்சாங்கம்.

(All rights Reserved.)

துந்துபிஞூ மாசிமீ 1923ஞூ பிப்ரவரி-மார்ச்சுமீ

இங்கிலீஷ் 1923-24, கலியுகஞூ 5023-5024, சாலிவாகனஞூ 1845, கோல்லம் 1098-99,

விக்ரமசக 1980-81, ஹிஜரி 1341-42, பஸலி 1332-33, பிரபவாதி 57-58.

| பிப்ரவரி மாதம். | மாசி மாதம். | கிழமைகள். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 12 | 1 | திங் | துவா 44-24 | பூரா 54-29 | வஜ் 24-8 | கும்பரவி. நா. 18 0 கலியுகாந்தம். |
| 13 | 2 | செவ் | திர 43-53 | உத் 55-41 | சித் 20-21 | மஹாசிவராத்திரி. பிரதோஷம். [விஷ்ணு |
| 14 | 3 | புத | சது 44-34 | திருவோ 58-2 | விதி 17-32 | வாகனமேற, தானியம்வாங்க. |
| 15 | 4 | வியா | ● 46-33 | அவி 60-0 | வரி 15-40 | துவாபரயுகாதி, சர்வத்ர அமாவாசை. |
| 16 | 5 | வெள் | பிர 49-52 | அவி 1-49 | பரி 14-51 | பால்குணசுத்தம். |
| 17 | 6 | சனி | துதி 53-59 | சத 6-35 | சிவ 14-49 | மாடு முதலானவை வாங்க |
| 18 | 7 | ஞாயி | திரு 58-54 | பூரட் 12-13 | வித் 15-29 | மந்திரஞ்ஜெபிக்க, பிரயாண விலக்கம். |
| 19 | 8 | திங் | சது 60-0 | உட் 18-26 | ஸா 16-36 | மீனயனம் நாழிகை 37-20. |
| 20 | 9 | செவ் | சது 4-9 | ரே 24-53 | சுப 17-54 | சாந்த சதுர்த்தி. |
| 21 | 10 | புத | பஞ் 9-19 | அசு 31-8 | சுப் 19-4 | சஷ்டி. |

| பிப்ரவரி மாதம். | மாசி மாதம். | [illegible] | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | 11 | வியா | சவ்த | 14-4 | பர | 36-51 | பிரா | 19-53 | அடுப்புவைக்க, ஆயுதம் பயிற்ற, மாடு |
| 23 | 12 | வெள் | சப் | 18-1 | கார் | 41-47 | மா | 20-6 | கிருத்திகை. [வாங்க. |
| 24 | 13 | சனி | அவ்த | 20-57 | ரோ | 45-36 | வை | 19-31 | குளம், கிணறு வெட்ட, கதிர் அறுக்க. |
| 25 | 14 | ஞாயி | நவ | 22-35 | மிரு | 48-9 | விஷ் | 17-58 | .................. |
| 26 | 15 | திங் | தெ | 22-57 | திரு | 49-31 | பிரீ | 15-22 | கரிநாள். |
| 27 | 16 | செவ் | ஏகா | 22-7 | புன | 49-38 | ஆயு | 11-56 | சர்வஏகாதசி, மாத்வஏகாதசி, கரிநாள். |
| 28 | 17 | புத | துவா | 19-59 | பூச | 48-35 | சௌ | 7-31 | பிரதோஷம், இரவில்தனியநாள், |
| மார்ச்சு 1 | 18 | வியா | திர | 16-47 | ஆயி | 46-31 | சோ | 2-12 | காமதகனம், பகலில்தனியநாள். [கரிநாள். |
| 2 | 19 | வெள் | சது | 12-45 | ◯மக | 43-54 | சுக | 49-31. | ஹோளிபண்டிகை, மாசிமகம், |
| 3 | 20 | சனி | பௌ | 7-51 | பூர | 40-25 | திரு | 42-16 | பால்குணபகுளம். [பௌர்ணமி |
| 4 | 21 | ஞாயி | பிர | 2-39 | உத் | 36-38 | சுதி | 54-14 | சிருஷ்டி ஆரம்பஞ் செய்ய, விதை விதைக்க. |
| 5 | 22 | திங் | திரு | 50-56 | அஸ | 32-34 | கண் | 27-2 | வித்தியாரம்பம், உபாயனம்செய்ய. |
| 6 | 23 | செவ் | சது | 45-5 | சித் | 28-29 | விரு | 19-17 | |
| 7 | 24 | புத | பஞ் | 39-35 | சுவா | 24-36 | துரு | 11-35 | |
| 8 | 25 | வியா | சவ்த | 34-18 | விசா | 21-4 | வியா | 4-56 | |
| 9 | 26 | வெள் | சப் | 29-20 | அநு | 18-3 | வஜ் | 50-52 | |
| 10 | 27 | சனி | அவ்த | 25-54 | கே | 15-49 | சித் | 45-7 | |
| 11 | 28 | ஞாயி | நவ | 23-1 | மூல | 14-26 | விதி | 40-14 | |
| 12 | 29 | திங் | தச | 21-17 | பூரா | 14-12 | வரி | 36-15 | |
| 13 | 30 | செவ் | ஏகா | 20-44 | உத் | 15-16 | பரி | 33-14 | |

| | | | |
|---|---|---|---|
| செ | | | |
| சு கே | [illegible] | | |
| பு | | | ராகு |
| சு | | குரு | சனி |

PRINTED BY SOLDEN AND CO., FOR K JAGADISAN B.A. EDITOR AND PUBLISHERS, MADRAS.

# அறிவிப்பு.

**சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்!**

1. சந்தாதாரர்கள் தங்களுக்கு வரும் சஞ்சிகையில் விலாசத்தின் வலப்பக்கத்து மேற்கோடியில் குறிப்பிட்டிருக்கும் சந்தா நெம்பரை அவசியம் குறித்துக்கொள்ளவும். (ரிஜிஸ்டர்ட் நம்பரல்ல.)

2. விஷயதானம்புரியும் நண்பர்கள் தாங்கள் அனுப்பும் விஷயத்தை சுத்தமான காகிதத்தில் அரைஷீட்டில் (கால் பேபர் கூடாது) ஒருபக்கத்தில் தெளிவாய் எளிய நடையில் எழுதவேண்டும். விஷயம் மூன்று பேபர்களுக்குக் குறையாதிருக்கவேண்டும். அவை பொது நலமாயும் ராஜாங்கத்திற்கு விரோதமில்லாதவைகளாயுமிருக்கவேண்டும். அவைகள் சொந்தமாயும், வேறு துண்டுகளிலிருந்து எடுத்து எழுதினால் இன்னவற்றிலிருந்து எடுத்து எழுதபட்டது, என்றும் எழுதவேண்டும். அவசியம் அவைகள் பிரசுரம் செய்யப்படும்.

3. சந்தாதாரர்கள், சந்தா தொகையை அனுப்பும்பொழுது தங்களது பூரணவிலாசத்தையும் விஷய தானம்புரியும் நண்பர்கள் தங்கள் வியாசத்தினடியில் தங்களது பூரண விலாசத்தையும் எழுதி யெங்களுக்கறிவிக்க வேண்டும்.

4. சந்தா நேயர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் தங்களது சந்தா நெம்பரை குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

5. மத்தியில் சந்தாதாரராகச் சேருபவர்கள் தங்கள் தொகையை மணியார்டர் செய்துவிடவேண்டும். அவர்கள் கூபனில் தங்கள் விலாசத்தை பூரணமா

யெழுதி "நாம் ஒரு புதிய நபர்" எனவும் வரையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

6. மத்தியில் சேரும் சந்தாதாரர்கட்கு, அவ்வருட ஜனவரிமீ முதற்கணக்கிடப்பட்டே சஞ்சிகை யனுப்பப்படும். அவர்களுக்கு அதுவரையில் வெளிவந்துள்ள சஞ்சிகைகள் சேர்த்து அனுப்பிவிடப்படும்.

7. சேர்ந்தாற்போல் 5 புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கும் சந்தா நேயருக்கு ஒரு ரூபாய் விலையுள்ள நாவல் இனாமாக அனுப்பப்படும். அங்ஙனம் சேர்ப்பவர் அவ்வைவரையும் தவிர வேறு ஒருவராயிருக்கவேண்டும்

8. கடிதங்களை சஞ்சிகையில் பிரசுரிப்பது பத்திராதிபரை பொறுத்ததாகும். பிரசுரிக்கப்படவேண்டிய கடிதங்கள் சந்தேகமன்னியில் பிரசுரிக்கப்படும். சந்தேகம் தெளிவிக்கப்படவேண்டிய கடிதங்கள், அவர்கள் சந்தேகம் பொதுவாய் ஏற்படக்கூடியதாயிருந்தாலொழிய சஞ்சிகையில் பிரசுரஞ் செய்யப்படமாட்டா.

9. எந்தச் சந்தாநேயருக்கேனுஞ் சஞ்சிகைவந்து சேராவிட்டால் அவர்கள் அந்த மாதம் 15 தேதிவரைப் பொறுத்துப்பார்த்து வராவிடில், பிற்பாடு அதே தமிழ் மாத முடிவிற்குள் எங்களுக்கு அறிவித்துப் பெற்றுக்கொள்ளவேண்டும் பிறகு அறிவிப்போர் கிரய மனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

10. இரண்டு மூன்று பேர்க்குச் சேர்த்துப் பணம் அனுப்புவோர்கள் கூபனில் மூன்று விலாசத்தையும் தெளிவாய் வரையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் அல்லது ஒரே விலாசத்தை அறிவித்தால் அதற்கு அனுப்பிவிடுகின்றோம்.

பத்திராதிபர்.

144019.

JL
031 m2.11, N23?4
N22.11